646

646
1-57

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா



துன்முகி ஹூ
தை மீ

ஸம்புடம் 16
ஸஞ்சிகை 1

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 2
2. சேஷத்வமும் மங்களாசாஸனமும் 6
[ஸ்ரீ. உப. கோடியாலம் துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்.]
3. பெரியோர்கள் பக்கலில் 2. 9
[ஸ்ரீ. உப. வேதாந்த வாவதூக, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]
4. மாலுகந்த மங்கையர் 12
[ஸ்ரீ. உப. வேளியநல்லூர் வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, வேம்பாக்கம்.]
5. இரண்டு தேசிகரத்நங்கள் 14
[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி, V. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மாம்பலம்.]
6. ராமாநுசனை அநுபவிக்கும் ராமாநுசன் 17
[ஸ்ரீ. உப. கனபாடி, வேதரத்னம், K. V. ஸந்தானகோபாலாசார்யஸ்வாமி, வேதபண்டிட், ஸம்ஸ்க்ருத கலாசாலை, ஹைதராபாத்.]
7. கோதையின் கட்டளையும் மேகத்தின் முழவொலியும் 19
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]
8. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 21
9. தை உத்திராடம் 23
[ஸ்ரீ. உப. செங்குரிச்சி S. ரங்கநாதாசார்ய ஸ்வாமி, சிரோமணி, ஆசிரியர், ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, பாதூர்.]
10. செய்திகள் 25

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } துர்முகி ௵ தை ௴ { ஸஞ்சிகை 1

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸமூஹநலனுக்குக் கடவுள் பக்தி அவசியம் என்றும்; பள்ளிக்கூடங்களில் கடவுளிடம் பக்தியிருத்தல் அவசியம் என்பதை மாணவர்கள் உணரும்படி பாடபோதனை அமைத்தல் அவசியம் என்றும் அரசியலரங்கில் தலைசிறந்தவர்கள் ஸமீபகாலத்தில் கூறிவருவதை நாம் கேட்டு மகிழ்கிறோம். தஞ்சை ஜில்லாவில் ஒரு கூட்டத்தில் அந்த ஜில்லா கலெக்டர் கடவுளிடம் பக்தி இருத்தல் மிகவும் அவசியம் என்றும், புராணங்கள் உயர்ந்த கொள்கைகளை உடையவைகள் என்றும், அவைகள் அர்த்தமில்லாத கதைகள் என்றுகூறுவது பிழையாகுமென்றும் கூறியதாக நாம் அறிகிறோம். இம்மாதிரியானசூழ்நிலை ஏற்படுவதற்குக் காரணங்களை நாம் ஆராய்ந்தால் உண்மை புலனாகும்.

பாரதநாட்டின் பெருமைக்குக் காரணம், அந்நாட்டில் புராதன மதப்பற்று தான். ஆந்மீகத்துறையில் ஈடுபட்டு, அதன் மூலமாகத்தான் நமது முன்னோர்கள் பெருமையடைந்திருந்தார்கள். நாமும் பெருமைப்படுகிறோம். அந்த ஸந்ததியில் வந்த நமக்கு பக்தியின் அவசியத்தையே எடுத்துக் கூறவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால் அதைக் கண்டு நாம் வருந்தாமல் இருக்க முடியவில்லை. பல நூற்றாண்டுகளாகவே ஆந்மீகத் துறையிலிருந்து நழுவி வரும் நம்மிடையே பொருளர்தாரத்தில் பற்றும், அது ஸம்பந்தமான ஆசாபாசங்களும் தலைதூக்கி நிற்பதால், ஆந்மீகஸம்பந்தமான பொருப்புக்களை நமக்குக் கூட இதரர் கூற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நெல் களஞ்சியம் எனப் பெயர் பெற்ற தஞ்சாவூர் ஜில்லாவில் கூட பர்மா, சயாம் முதலிய அந்ய தேசங்களிலிருந்து நெல் வரவழைக்க வேண்டிய காலம் ஏற்பட்டிருந்ததை நாமே நேரில் கண்டிருக்கிறோம். இதைக்கண்டு வருந்தாமல் இருக்க முடியுமா?

இம்மாதிரியான பக்தியற்ற நிலைமை ஏற்பட்டதற்கும் பல காரணங்கள் இருப்பினும், இது ஸமயம் இரண்டு காரணங்கள் நம்மால் கவனிக்கத் தக்கவைகள்.

'இளமையிற் கல்' என்றபடி சிறு வயதிலேயே நமது பிள்ளைகளுக்கு பக்தியைப் புகட்டும் வழிகளைக் கையாளவேண்டியது மிகவும் அவசியம். ஸுமார் முப்பது வர்ஷங்களுக்கு முன் ஆரம்பப் பள்ளிக்கூட பாடதிட்டங்களில் 'நீதிபோதனைக் கதைகள்' என்ற பகுதி இடம் பெற்றிருந்தது. அது ஸமயம் புராணக்கதைகளை, சரியான மகுடமிட்டு, எளிய நடையில் எழுதிய பாடபுத்தகங்கள் குழந்தைகளுக்கு ஏற்பாடாகியிருந்தன. நாளடைவில் புராணக் கதைகளை போதிக்கக்கூடாதென்று சில மதாந்தரஸ்தர்களின் தூண்டுதலின் பேரில், அவைகளை நீக்கி விட்டு தேச சரித்திரத்திலிருந்து கதைகளை பாடபுத்தகங்களில் சேர்க்கவாரம்பித்தனர். இது சிறிது சிறிதாக மாறி, ஸமீப காலத்தில் இம்மாதிரியான பாடமே, பாடதிட்டத்திலிருந்து விலகியது. இதன் முடிவுதான் ஸமீபத்தில் நமது ஸமூஹத்தில் சிறுவர்களிடம் காணப்படும் நாஸ்திகவாதத்திற்குக் காரணம்.

மற்றொரு காரணமும் மிக முக்யமானது. அதாவது நாஸ்திகவாதத்தைப் பரப்பி வரும் ஒரு கோஷ்டியினரை அரசாங்கம் தடுக்காமல் இருந்ததுடன், மறைமுகமாக அவர்களுக்கு ஆதரவும் காட்டுகிறது என்ற ஓர் வதந்தி உலாவுவது தான். நாஸ்திக கோஷ்டியில் பெரும்பாலும் இளைஞர்களாகவே இருத்தலே

இதற்குச் சான்றாகும். தங்களை யாரும் தடுக்க முடியாது, அரசாங்கமும் தலையிட்டுத் தங்களைக் கண்டிக்காது என்ற எண்ணம் இவர்களுக்கு ஏற்பட்டதே நமது ஸமூஹத்துக்கு ஒரு தீங்கை விளைவிக்கப் போதுமானது. இவர்களுக்கும் சுதந்திரம் உண்டு, ஒரு எல்லை வரைதான் அரசாங்கம் தலையிட முடியும் என்றெல்லாம் கூறி வருவது இவர்களுக்கு ஆதரவு அளிப்பதாக ஆகிறதல்லவா?

இம்மாதிரியான நிலைமை ஏற்பட்ட பின், இதைக் கண்டு வருந்துவதில் என்ன பிரயோஜனம்? ஆயினும் ஸமூஹம் இன்னும் சீர்கெடாமல் இருக்கப் பொதுமக்களும், அரசாங்கமும் கூட இனியாவது இம்மாதிரி குறைகளைத் தடுப்பார்கள் என்று நம்புகின்றோம். சிறு வயதிலேயே நல்ல பாடதிட்டங்களையும், அவைகளில் மதபோதனைக்குரிய அவகாசத்தையேற்படுத்திக் கொடுத்து வருங்காலப்ரஜைகளையாவது நல்வழிக்கிக் கொண்டு வருவார்கள் என நாம் நம்புகிறோம்.

* * * * * * *

'மெய்யுடையொருவன் சொல் இன்மையினால் பொய்போலும்மே பொய்போலும்மே' 'பொய்யுடையொருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே, மெய்போலும்மே' இவ்விதமாகிய பழைய வாக்யங்கள் இக்காலத்தவர்களுக்கே தான் உண்மையாகின்றன.

ஸமீபகாலங்களில் நமது ஸமூஹத்தில் பொய் உண்மை போலும், உண்மை பொய் போலும் சித்தரிக்கப்படுவது ஸர்வஸஹஜமாகி விட்டது. அரசியல் துறையில் உள்ளவர்கள் எவ்விதமாயினும் தங்கள் கொள்கைகளை நாட்டு மக்கள்மீது திணித்தோ, மக்களை ஒப்புக்கொள்ளும்படி செய்தோ, வெற்றி பெறுவதென்பது இயற்கை. சாணக்கியரின் அர்த்தசாஸ்த்ரத்தைப் பின்பற்றுகிறவர்கள் இம்முறையை ஒப்புக்கொள்ள வேண்டியது தான்.

உதாரணமாக, பாகிஸ்தானிய சர்க்கார் இம்முறையைக் கடைப்பிடித்துத் தான் வெற்றி பெற முயற்சிக்கிறார்கள். இதைத் தடுப்பதென்பது இம்மாதிரியான வழியையே பின்பற்றினால் தான் முடியும் என்று சொல்பவர்களுமுண்டு. இது முறையல்ல, நியாயமான மார்க்கத்திலேயே நமது நடவடிக்கைகள் இருத்தல் வேண்டும், அப்படியாயின் நமக்கு வெற்றி நிச்சயம் எனக் கூறுபவர்களுமுண்டு. இவர்கள் விஷயத்தில் நாம் ஒரு விஷயத்தைத் தீர்மானித்துக்கொள்ளவேண்டி வருகிறது. அதாவது- எது நியாயம்? என்பது தான். அரசியல் வாதிகளுக்கு நியாயமென்பது, ஆத்மீக வாதிகளுக்கு நியாயமாகாது. அரசியல் தத்துவங்களைக் கையாண்டு ஆத்மீகதத்துவங்களைத் தீர்மானிக்க முடியாது. அறிவாளிகள் இதை நன்குணர்வர். ஆயினும் தங்களுக்குள்ள ஆசாபாசங்களை உணரமுடியாமல் வேற்று மார்க்கங்களில் செல்வதைத் தடுத்துக்கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள் என்பது உண்மை. இவர்களைக் கண்டு உலகம் வருந்த வேண்டியதே.

நமது அரசியல் தத்துவங்களில் இம்மாதிரியான ஓர் நிலையை நாம் ஒப்புக்கொள்வதாயினும், ஸமூஹத்துறையில், அதிலும் தனிப்பட்டவர்கள் தங்களுக்கென்று ஒதுக்கி வைத்துக்கொண்டுள்ள ஸமூஹ பழக்க வழக்கங்களிலும், அரசியல்வாதிகள் பிரவேசித்து தங்கள் கொள்கைகளைப் பரப்புகிறார்கள் என்பது தான் மிகவும் வருந்தத் தக்கது. இதைக் காட்டிலும் மற்றொரு விபரீத நிலைமை நம்மிடையே குடிகொண்டிருக்கிறதென்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆயினும் ஏன் இம்மாதிரியான செயலை நாம் கைவிடுவதில்லை? இச்செயல்களை நாம் ஏன் நிந்திக்கக் கூடாது? என்றெல்லாம் நன்கு உணரவேண்டும். அதாவது அரசியலில் தலையிடாமல், ஆத்மீக தத்துவங்களைப் பரப்புவதே நமது நோக்கம். நமது மதாசாரங்களையும், ஸம்ப்ரதாயங்களையும் அபிவ்ருத்தி செய்வதுதான் நமது கொள்கை என்றெல்லாம் வெளியுலகுக்குத் தெரியும்படி கூறி வருபவர்கள்கூட இதரர்களுடைய மனது புண் ஆகும்படி நடந்து கொள்கிறார்கள் என்றால், அவர்களைப் பற்றி நாம் என்ன சொல்வது? என்ன நினைப்பது?

நமது தென்னாட்டுச் சரித்திரத்தில் பத்து, பதினொன்றாவது நூற்றாண்டுகளில் மதக்கொள்கைகள் ஸம்பந்தமாக தீவிரவாதிகளாகிய அர

சர்களும், அது ஸம்பந்தமான பூசல்களும் இருந்து வந்தனவென்று படிக்கிறோம். நாளடைவில் மிதவாதிகள் அதிகமாகவே, தங்கள் கொள்கைகளுக்கு இடையூறு இல்லாமலும், வேறுபட்ட கருத்துடையவர்களை நிந்திக்காமலும், ஓர் ஸௌஜன்யம் நிலவ ஆரம்பித்தது. இது ஸமூஹத்தின் முன்னேற்றத்துக்கு மிகவும் உதவியாக இருந்தது.

ஆனால் நெடுங்காலத்துக்கு முன்னதாகவே மறந்துபோன பழைய வாதங்களை மறுபடியும் ஜ்ஞாபகப்படுத்தும் விதமாகவும், மறுபடியும் மேல் வாதங்களை எழுப்பும் விதமாகவும், மத ஸம்பந்தமான வாதபுத்தகங்கள் தற்காலம் ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றன வென்பதும், அதையே மத்யஸ்தத்ருஷ்டியுள்ளவர்கள், பெரியோர்கள் அபிநந்திக்கிறார்கள் என்பதும் நம்ப முடியாத உண்மையே. இதன் விளைவு விபரீதமானது என்பது மறுக்க முடியாது. எம்மாதிரியான கொள்கைகள் இப்பொழுது கண்டிக்கப்படுகிறதாக உத்கோஷிக்கப்படுகின்றனவோ, அவைகளை நிலை நாட்ட முற்படுபவர்கள், தத்கால உத்கோஷங்களுக்கு ஆதாரமான கருத்துக்களைக் கண்டிப்பார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடியது தானே. இதன் முடிவு தானே கண்டனங்களும், கண்டனமண்டனங்களும். இம்மாதிரியான நிலைமையை தத்காலம் ஏற்படுத்துவது அவசியமா? ஏற்படுத்தியவர்களை அபிநந்தித்தும், அதன்மூலம் இம்மாதிரி முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுப்பதும், நமது ஸமூஹத்தின் நிலைக்கு ஏற்றது தானா?

இதே மாதிரியாகவே ஒரே மதத்தினருக்குள்ளும், அதிலும் ஒரே சமயத்திலுள்ளவர்களுக்குள்ளும், ஏற்பட்டிருக்கும் அல்பவித்யாஸங்கள் காரணமாக, ஸமூஹத்தில் ப்ரஸித்தர்களென்று விளம்பரப்படுத்திக்கொள்பவர்களும் தங்கள் கருத்துக்களையே ஸமூஹத்திலுள்ள எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற ஆக்ரஹத்தினால்- **'पश्यति परेषु दोषानसतोऽपि जनस्सतोऽपि नैव गुणान् । विपरीतमिदं स्वस्मिन् महिमा मोहान्धजनस्यैषः'** பிறரிடம் குணங்கள் இருப்பதை க்ரஹிக்காமலும், தோஷங்கள் இருப்பதாக பாவித்தும் வருபவர்கள் ஸொந்த விஷயத்தில் மாறிய கொள்கைகளுடன் இருக்கிறார்கள் என்பது இக்காலத்தின் விபரீதப் போக்காக இருப்பது போல, அனாவசிய சர்ச்சைகளில் காலங்கழிப்பதையும், அந் நிலைக்கு இதரர்களையும் வரவழைக்க முயலுவதையும் கண்டு நாம் வருந்தவேண்டியிருக்கிறது.

மதம், கொள்கை, சாஸ்த்ரம், ஸம்ப்ரதாயம் இவை போன்ற பற்பல நுட்பவிஷயங்களையே அறிய முடியாத பொது ஜனங்களின் மத்தியில் நாம் எல்லோரும் அல்லல்படும் வேளையில் நமக்குள் ஓர் அமைதியையடைந்து, ஸமூஹத்தின் நலனுக்குப் பொது முயற்சி செய்தால் எவ்வளவு நேர்மையாகவும், விரும்பத்தக்கதாகவும் இருக்கும் என்பதை நாம் சொல்லித்தானா உணரவேண்டும்?

இம் மாதிரியான காரணங்களினால் தான் நமக்கு அருகாமையிலுள்ள உணர்ச்சி வசப்பட்ட கூற்றுக்களைக் கண்டு நாம் வருந்தவேண்டியிருக்கிறது.

காஷ்மீர் ஸம்பந்தமாக பலவித நூதன கருத்துக்களை அடிக்கடி வெளியிடுவதும், பல்வேறு நாடுகளில் இவைகளை ப்ரசாரப்படுத்தி, அதன்மூலம் ஒரு சாரார் தங்கள் கொள்கைகளுக்கு ஆதரவு தேட முயற்சிப்பதும்' இதே ஸமயம் ஆத்மீகபலத்தில் (ஸத்யத்தில்) கட்டுப்பட்டு, வீண் பிரசாரங்களில் இறங்காமல் மற்றொரு சாரார் உண்மையே நிலவும் என்று (**'सत्यमेव जयते'**) நம்பிக்கை வைத்திருப்பதும் நாம் பார்த்து வரும் உண்மையல்லவா?

இதனால் தான் பேச்சு வன்மையினால் பொய்யை மெய் போல் கூற வல்லவர்களும், வீண் பேச்சில் இறங்காதவர்கள் உண்மையான வழியைக் கடைப்பிடித்தாலும், அவ்வழி தப்பு வழிபோல், உலகத்தில் சிலருக்குத் தோன்றலாம் என்றும் கூறினோம். **'सत्यान्न परं किंचित्'** ஸத்யத்தைக் காட்டிலும் உயர்ந்ததில்லை. **सत्यमेव जयते**– ஸத்யமே ஜயிக்கும்-

* * * * * * *

நமது ஸம்ப்ரதாயத்தில் வைதிக லௌகிக ஸம்பத்திற்கு ஸமீபத்தில் ஒரு நஷ்டம் ஏற்

பட்டிருக்கிறது. ப்ராசீன பண்டிதர்களில் ஒருவரான ஸ்ரீ. உப. தோட்டாலம், வேணு கோபாலர்சார்ய ஸ்வாமி பரமபதித்து விட்டார். லௌகிகத்தில் இஞ்ஜினீயராகவும் வைதிகசிரத்தையுடன் கூடியுமிருந்த ஸ்ரீ உப. எம். பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பரமபதித்து விட்டார்.

தோட்டாலம் ஸ்வாமி ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயத்தில் ப்ரஸித்த சிஷ்யராகவும், பண்டிதராகவும் எழுந்தருளியிருந்தவர். சென்னை வெஸ்லி காலேஜியில் ஸம்ஸ்க்ருதாத்யாபகராகவிருந்து, ஓய்வெடுத்துக்கொண்ட பிறகு, அந்த ஸ்வாமியின் வைதுஷ்யத்தையுகந்து நமது கலாசாலையில், ஸ்ரீமதழகியசிங்கரின் அநுக்ரஹத்தினால் கைங்கர்யம் கொடுக்கப்பட்டு அதைச்செவ்வனே கவனித்து வந்தார். பிறகு ஸ்ரீமதழகியசிங்கரின் க்ருபையினால், ஸ்ரீ ஸந்நிதியில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் (மாம்பலம், பாதூர், ஸ்ரீரங்கம்) ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் கைங்கர்யம் பார்த்து வந்தார். தன் வாழ்நாட்களில் இறுதி காலங்களை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனது கைங்கர்யத்திலேயே கழித்து வந்த பெருமை இந்த ஸ்வாமிக்கு உண்டு.

ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி லௌகிகராக இருந்தாலும், ஸ்ரீ ஸந்நிதி கைங்கர்யங்களில் மிகவும் ஈடுபட்டவர். நமது கலாசாலை கட்டட நிர்மாணத்தில் இந்த ஸ்வாமி பூர்ணமாக பங்கெடுத்துக்கொண்டு, கார்யத்தை பூர்த்தி செய்து கொடுத்தார். ஸ்ரீ ஸந்நிதியின் ஸத்சிஷ்யர்களில் இந்த ஸ்வாமியும் முக்கியமானவர்.

'जातस्य हि ध्रुवो मृत्युः' என்று பிறந்தவர் இறப்பதென்பது உலகநியதியேயாயினும், ப்ரதான சிஷ்யர்களின் மறைவுக்கு நாம் சோகிக்காமல் இருப்பதற்கில்லை.

ஸ்ரீ ந்ருஸிம்ஹன் கைங்கர்யத்தில் பூர்ணமாக இவ்வுலகிலேயே பங்கெடுத்துக்கொண்டு, பரலோகத்து (ஸ்ரீ ந்ருஸிம்ஹ) கைங்கர்யத்துக்கும் வழி செய்துகொண்ட மஹான்கள் இவர்கள்.

முக்கிய அறிவிப்பு

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை அடியிற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் மேவிலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்றாகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ:

சேஷத்வமும் மங்களாசாஸனமும்

ஏதே த்விஜா விபுலசாகமஹாகமாந்த-
நிஷ்டா: ப்ரபோதமதிகம் ய ருதச்சலேந।
தத்வம் பரஸ்பரமிவ ப்ரதிபோதயந்தி
ச்ருத்யந்ததேசிகமணே! தவ ஸுப்ரபாதம் ॥

சேஷத்வமென்பது தனக்கு மேற்பட்ட ஒரு வஸ்துவுக்காக இருந்து அந்த வஸ்துவுக்கு அதிசயத்தைச் செய்து அதை ஸந்தோஷப் படுத்துவது. எந்த மற்றொரு வஸ்துவுக்கு ப்ரயோஜனத்தைச் செய்யவேண்டு மென்ற இச்சையினாலே எதன் ஸ்வரூபமானது தானிருக்குங்காலமெல்லாம் அவ்விதமங்கீகரிக்கத் தகுந்ததாக விருக்கின்றதோ, அது அந்த மற்றொரு வஸ்துவுக்குச் சேஷமென்றும், மற்றொரு வஸ்து அதற்குச் சேஷி யென்றும் சொல்லுகிறோம். அதாவது எந்த வஸ்துவின் ஸத்தை ஸ்திதி ப்ரவ்ருத்திகள் மற்றொரு வஸ்துவின்பொருட்டே ஆகின்றனவோ அவ்வஸ்துவைச் சேஷமென்றும், மற்றதைச்சேஷி என்றும் தெரிந்துகொள்ளுகிறோம். வஸ்த்ரம் பூஷணம் முதலியவை நமது தேகத்திற்கு சேஷபூதங்களாகின்றன. ஒரு பலத்தை உத்தேசித்து அங்கீகரிக்கப்படும் யாகங்கள் முதலியவை அந்தப் பலத்திற்குச் சேஷம். நமது தேஹம் நம்மாத்மாவுக்குச் சேஷம். பிறப்பினாலோ, செய்கைகளினாலோ மற்றவர்களுக்கு தாஸர்களாயிருப்பவர் தமது ஸ்வாமிகளாயிருக்குமவர்களின் ப்ரயோஜனத்தையே செய்யவேண்டுமென்ற ஸ்வரூபமுடையவர்களாயிருந்தால் அந்த ஸ்வாமிகளைக் குறித்து சேஷர்களாகிறார்கள்.

மேற்கூறியவாறு நித்யமாயிருக்கும் நித்ய விபூதி, அநித்யமாயிருக்கும் லீலாவிபூதி இவைகளில் காணப்படும் சேதனாசேதனவஸ்துக்களெல்லாம் எம்பெருமானுடைய ப்ரயோஜனத்தையே செய்யும் ஸ்வரூபத்தைப் பெற்றிருக்கின்றன. ஆதலால் ஸகல வஸ்துக்களும் ஸ்ரீமந்நாராயணனுக்கே சேஷங்கள். பகவான் இவைகளுக்கெல்லாம் சேஷி. 'ஸர்வஸ்ய வசீ ஸர்வஸ்யேசாந:' என்றவாறு ப்ரபஞ்சம் முற்றிலுமே ச்ரிய:பதியால் தாங்கப்பட்டு, நியமிக்கப்பட்டு அவன் ப்ரயோஜனத்திற்காகவே ஏற்பட்டிருப்பதால் அவனுக்குச் சரீரமாய் அவனிடமிருந்து பிரிக்கமுடியாத விசேஷணமாய் அவனுக்கே சேஷமாயிருக்கின்றது. ஜீவாத்மா எப்படி தன் ஸ்வரூபாச்ரிதமாயும் ஸங்கல்பாச்ரிதமாயுமிருக்கும் சரீரத்தைத் தாங்கி, நியமித்து அதைச் சேஷமாக வைத்துக்கொண்டிருக்கிறானோ, அவ்விதமே நம் கமலையுடனிலங்கும் சரண்யன் ஸர்வ சேஷியாய், அவனுக்காகவே யிருக்கும் ஸ்வபாவத்தைப் பெற்ற சேதனாசேதனங்களை அங்கீகரித்து அவற்றாலே அதிசயத்தை யடைகிறான். மேலும் 'அஸ்யேசாநா ஜகத:' என்ற பெரிய பிராட்டியான லக்ஷ்மீ பகவானோடு எவ்விதத்திலும் ஸமமாயிருந்தும், 'காந்தஸ்தே புருஷோத்தம:' 'நின் திரு தனக்கு நீ திருவாகி' 'சேஷித்வே பரம: புமாந்' என்றபடி பகவானுக்கு சேஷமாய் அதிசயத்தைச் செய்கிறாள்.

'யானறியும் சுடராகி நின்றேன், மற்றும் யாதுமல்லேன், வானமரும் திருமாலடியேன், மற்றோர்பற்றுமிலேன்' என்றபடி ஜ்ஞாநஸ்வரூபனும் ஜ்ஞாநகுணகனுமான ஜீவாத்மா ச்ரிய:பதிக்கே அநந்யார்ஹசேஷபூதன். 'விஷ்ணுசேஷோபரிக்ரஹ:' என்று பகவானுக்குச் சரீரமாய், அவன் ப்ரயோஜனத்தைத் தவிர வேறு ப்ரயோஜனமில்லாதவனாய் சேஷமாயிருப்பதையே ரஸமாக உடைத்தாயிருக்கிறான். இச்சேதனன் எந்த ஸ்திதி ப்ரவ்ருத்தியிலும் ஸர்வதேசகாலாவஸ்தைகளிலும் 'ஸர்வாவஸ்தோசிதாசேஷசேஷதைகரதிரூப' (கத்யம்)

என்று ஸ்ரீதரனால் தரிக்கப்பட்டு அவனை விட்டுப் பிரிந்திருக்கமுடியாதவனாய், அவனால் நியமிக்கப்பட்டும் தானுள்ளவரையில் பகவானுக்கே எல்லா கைங்கர்யங்களையும் செய்வதில் ஆசையை ஸ்வரூபமாக வுடையவனாய், அவனுக்கே சேஷபூதனாகிறான். தன் ஆத்ம ஸ்வரூபத்தை யறிந்த க்ஷேத்ரஜ்ஞன், தான் எந்த ஆச்ரமத்திலிருந்தாலும், தன் உயிரான வாஸுதேவனுக்கே ஊழியஞ்செய்யத் தகுந்தவன். அவன் ப்ரயோஜனத்தைத் தவிர வேறு யாதொரு புருஷார்த்தமும் இவனுக்குக் கிடையாது. சேதனன் எம்பெருமானுகந்ததும் சாஸ்த்ரானுமதமுமான ஏவல், தேவை செய்து பகவானுக்கு இஷ்டவினியோகார்ஹனாயிருத்தலே தன் ஸ்வரூபநிரூபகமாயுடையவன். இச்சேதனன் பகவானுக்கும் பிராட்டிக்கும் நிருபாதிக சேஷனென்று உபநிஷத்துக்கள் நிஷ்கர்ஷம் செய்கின்றன. பகவத்கைங்கர்யத்தைத் தவிர வேறு எவ்வித ப்ரயோஜனத்தையும் பெறாத இஜ்ஜீவாத்மா ஸ்ரீ கௌஸ்துபஸ்தானீயனாய் ஹ்ருதயங்கமனாய் எம்பெருமானின் குமாரனென்றும், சிஷ்யனென்றும், சேஷபூதனென்றும் தாஸபூதனென்றும் வேதங்களில் சொல்லப்படுகிறான். இவ்விதம் ஒழிக்கவொழியாத சேஷிசேஷி ஸம்பந்தத்தாலே சேதனனுக்கும் ஸர்வேச்வரனுக்கும் தாஸத்வ ஸ்வாமித்வங்கள் ஏற்படுகின்றன. 'பாரதந்த்ரமாயிருப்பது துக்ககரமானது' என்பது எம்பெருமானையும் பரமபாகவதர்களையும் தவிர மற்ற வஸ்துக்களின் விஷயத்தைப் பற்றியது. பகவானுக்கே நாம் சேஷமாகையால் அவனையும், அவனுகந்த பாகவதர்களையும் தவிர மற்றவர்களுக்கு நாம் சேஷவ்ருத்தி செய்வது துக்ககரமாகவேயிருக்கும்.

எம்பெருமானுக்கு சேஷமாயிருப்பது ஜீவனுக்கு நிரவதிககைங்கர்ய புருஷார்த்த ஹேதுவாகிறது. நிருபாதிகதாஸனான சேதனன் பகவானுக்கு ப்ரீதி என்று தெரிந்துகொண்டு கைங்கர்யத்தைச் செய்வதால் ஆத்மாபிமானானுகுண புருஷார்த்த வ்யவஸ்தையின்படியே ஸ்வானுரூபமான புருஷார்த்த ருசியை யடைந்து, அந்த புருஷார்த்தத்திற்கு வேண்டிய உபாயவிசேஷத்தையும் தெரிந்துகொள்ளுகிறான். ஜீவனை ரக்ஷிக்கக் கடமைப்பட்டிருக்கும் நிருபாதிகசேஷியும் ஸித்தோபாயனுமான ஸ்ரீநிவாஸனே, கர்மவச்யனான சேதனனை ஒரு உபாயத்தில் மூட்டி ரக்ஷிக்கிறான். சேஷபூதனை ரக்ஷிக்கச் சேஷி ப்ராப்தன். சேஷன் தான் செய்கிற வியாபாரங்களில் தனக்கு ஸ்வாதந்த்ரியமில்லாமையால், பெருமாளே உபாயமென்கிற ஜ்ஞானத்தை யடைந்து 'ப்ரியதம ஏவ ஹி வரணீயோ பவதி' என்றவாறு ப்ரீதியோடு எம்பெருமானை யாராதித்து சேஷத்வ ப்ரயுக்த கைங்கர்யங்களைச் செய்கிறான்.

சேஷத்வானுஸந்தானமே ஜீவனுக்கு உஜ்ஜீவந ஹேதுவாகிறது. 'உன்னை யுகப்பிக்கும் கைங்கர்யத்தை நான் பெறவேண்டுமென்று ப்ரார்த்தித்தாலும், என்னையடிமைகொண்டு நீ உகக்க வேண்டுமென்று பணிந்தாலும்' பெருமாள் சேதனனிருவருக்கும் பரம ப்ரயோஜனமாகக் குறையில்லை. 'குருஷ்வ மாமநுசரம்' (ரா-அ) என்று இளையபெருமாள் ப்ரார்த்தித்தபடி, தானுந்தன்னுடைமையும் பகவானுக்கு சேஷமென்றநுஸந்தானம் செய்யும்போது, எம்பெருமான் ஜீவனின் அளவற்ற ப்ரீதிக்கு விஷயமாகிறார். அவ்விதம் தன் ப்ரீதிவிசேஷத்திற்கு ஜீவனை விஷயமாக்கிக்கொண்டு தன்னிடம் சேர்த்துக்கொள்ளுகிறார். பூமகள் எல்லையற்ற காதலோடு அணையும் இப்புருஷோத்தமன் சேஷனான ஜீவனை அணைத்துக்கொண்டு அவனுக்கு நிரதிசய ஸுகத்தை அளிக்கிறான். சிறியதோர் இருட்டு இடைகழியில் முதலாழ்வார்களின் ஸம்மர்த்தனத்திற்கும் உடையவரின் ஒருகை தீர்த்தத்திற்கும், ஸ்ரீவேங்கடநாதன் கொடுத்த வொருவாய் க்ஷீரத்திற்கும் பகவான் எவ்விதமாசைப்பட்டான் பாருங்கள். தன் விபவத்திலேயே சேஷத்வரஸத்தில் மூழ்கியிருக்கும் சேதனன் 'இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றபடி அர்ச்சாவதாரங்கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் பரத்வஸௌலப்யாதி கல்யாணகுணங்களை யநுபவித்து அவ

னது கரைபுரண்ட கருணைக்கடலில் ஆழ்ந்து பரமபதத்தையும் வேண்டாது சேஷத்வ ஆநந்தத்தை யநுபவிக்கிறான். ப்ரபந்நனான சேதனனுக்கு நித்யஸூரிகளோடொக்க அநுபவம் இங்கேயே கிடைக்கிறது.

ஸ்ரீவைகுண்டமென்கிற பரமபதத்தில் சேஷத்வமே தனக்கு நிரூபகமாய் அஸம்ஸாரிதரூபங்களுடன் பெருமாளுக்கு அசேஷ சேஷவ்ருத்திகளைப் பண்ணுவதால் சேஷன் என்றும், ஸர்வசரீரியான எம்பெருமானைத் தன் மடியில் ஏகதேசத்தில் வைத்துக்கொள்ளும்படியான வைபவத்தை யுடையவனான அனந்தனென்றும் அழைக்கப்படும் ஆதிசேஷனும், வேதாத்மகனும், வாஹநேந்த்ரனுமான கருடாழ்வாரும், வைகுண்டவசவர்த்திகளாய் எம்பெருமானின் திருவுள்ளத்தை யறிந்து அவனுகப்பையே புருஷார்த்தமாகக் கருதி அவனையநுபவிப்பதினாலுண்டான ஆநந்தபரீவாஹரூபங்களான கைங்கர்யங்களைச் செய்கிறார்களென்று சாஸ்த்ரங்கள் நமக்குச் சொல்லிக்கொடுக்கின்றன. 'நிவாஸ சய்யாஸந பாதுகாம்சுகோபதாநவர்ஷாதபவாரணாதிபி:' சென்றால் குடையாமிருந்தால் சிங்காசனமாம்' என்று அநந்தனும், 'தாஸஸ் ஸகா வாஹநமாஸனம் த்வஜோ யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய:' 'தாஸனுமாந்தோழனுமாய்' என்றபடி வைநதேயனும் பெருமாளிடத்தில் நீங்காப்பணிவிடை செய்கிறார்களல்லவா. இவ்விருவரும் பகவத் சேஷத்வ ரஸத்தில் ருசியுடையார்க்கெல்லாம் ப்ரதமோதாஹரணமாய் விளங்குபவர்கள். இவர்களைப்போல் எல்லா சேதனர்களும், 'பரிசர்யாவிபவை: பரிஷ்க்ருஷீஷ்டா:' என்றபடி பகவானிடம் கைங்கர்யமான ஐச்வர்யத்தை ப்ரார்த்திக்கவேண்டும்.

பகவச்சேஷத்வத்தின் எல்லை பாகவதசேஷத்வத்தில் முடிகிறது. 'பகவத்பக்தா: மாத்ருசாம்' 'நின்தனக்கு நிகர் நின்னடியடைவார்' என்றபடி பாகவதசேஷத்வம், ஸ்வேச்சாப்ரவ்ருத்தமாயும் குணஜ்ஞானமடியாகவும் உண்டாகிறது. இரண்டு பாகவதர்களில் பரஸ்பர சேஷத்வம் ஸ்வரூபவிருத்தமாகாது. பகவானுடைய ப்ரீதிக்கே காரணமாகும். லோகத்தில் ஒரு அதிகாரி தான் கோரிய கார்யத்திற்குப் பிறரால் சேஷியாயும், அக்கார்யத்திற்குத்தானே சேஷமாயுமிருப்பதைக் காண்கிறோம். சக்ரவர்த்தித்திருமகனின் நியமனத்தால் பரதாழ்வானும் பாதுகையும் அந்யோந்ய சேஷவ்ருத்தி செய்துகொண்டது பகவானுகந்த நியதமான அதிசயந்தான். இப்படியே ஸுக்ரீவனும் பாகவதசேஷத்வபர்யந்தமான பகவச்சேஷத்வத்திலே நிலைநின்றவராகையாலே 'ஸகித்வம் ச அப்யுபைது ந.' (ரா-யு) என்று பெருமாள் திருவடிகளிலே விபீஷணாழ்வாரைச் சேர்த்து தாமவருக்கு அடிமைசெய்ய விரும்பினார். குணவசீக்ருதனான எம்பெருமான் தன் பாகவதர்கள் விஷயத்தில் வரும் பரஸ்பர சேஷத்வ தாஸத்வங்களை போக்யமாக அங்கீகரித்துத் தன் சேஷித்வத்தைப் பூர்த்தி செய்துகொள்ளுகிறான். பாகவத சேஷத்வத்தோடு கலந்த பகவச்சேஷவ்ருத்தியில் ரஸமதிகம். தன் ஸ்வாமியாகிய ஸர்வேச்வரன் தன்னை யதேஷ்டமாக உபயோகித்துக்கொண்டு தனக்குப் புருஷார்த்த விசேஷமாகிற பாகவத கைங்கர்யத்தைத் தன்னைக்கொண்டு அங்கீகரித்தான் என்று சேதனன் உணரவேண்டும்.

(தொடரும்)

ஸ்ரீ:

பெரியோர்கள் பக்கலில் 2

அண்மையில் அடியேன் அயனூர் சென்றிருந்தபொழுது அங்கு ஒரு பெரியவர் சில விஷயங்களை அடியேனிடம் வெளியிட்டார். அவைகளை அடியேன் ஒரு ஸமாஜத்தில் அடுத்தாற்போல் பேசவேண்டியிருந்த நிலையில், கேட்டபடியால் அவைபற்றி அப்பொழுதே அவரிடமே விமர்சிக்க இயலாது போயிற்று. பிறகு ஆராய்ந்தவளவில் அப்பொழுது மனத்திற்பட்டபடியை இங்கு விவரிக்க விரும்புகிறேன்.

பொதுவிலேயே பெரியோர்கள் உதார குணம் படைத்த மனத்தவர். தாம் சொன்ன பொருளை கேட்போர் தாராளமாக ஆராயவும் தங்களுக்குள் ஒருவிதமான தீர்மானத்திற்கு வரவும் இடம் தந்து கருணையுடன் உபதேசிக்கும் இயல்பினர். 'விம்ருச்ய ஏதத் அசேஷேண யதா இச்சஸி ததா குரு' என்று கண்ணன் கீதையில் அர்ஜுனனுக்கு இவ்வித விஷயத்தில் ஸ்வாதந்த்ரயம் கொடுத்து அருளிச்செய்தான். பெரியோர்கள் செய்யும் உபதேசமோ, வேதபுருஷன் வெளியிடும் கருத்துக்களோ பலதிறப்பட்டவைகளாயும், பலவித அதிகாரிகளின் நிலைகளைப்பற்றியவையாகவும் இருக்குமாதலால் அவைகளை ஒரு பெரிய வைத்தியசாலைக்கு, தண்ணீர் பந்தலுக்கு உபமானமாகக் கூறலாம். மோர், நீர், பானகம் முதலியவை அவரவர் உடல் நிலைகளை அனுஸரித்து தண்ணீர் பந்தலில் பெறப்படுகிறது. எல்லாவித வைத்யமுறைகளையும் விவரிக்கும் ஆயுர்வேத நூல் ஒன்றில் வெறுமனே தான்தோன்றியாக, ஒருவன் ஏடு புரட்டி சிகித்ஸை செய்யத் துவங்கினான். அதில் ஓரிடத்தில், வாயு பிடிப்புக்குச் சூடிடச் சொன்னதை ஆதாரமாகக்கொண்டு, வாதரோகத்தால் முடங்கிக் கிடந்த தன் மாதாவுக்கும் அவ்விதமே அவன் செய்ய, அவள் தீப்புண்கள் புரையோடி இறைவனடி சேர்ந்தவிதம் பலரும் கேட்ட கதையே. அந்தோ! அது மாட்டு வைத்தியமே ஒழிய வீட்டு வைத்தியமன்று என்பதை அவன் அறியவில்லை. ஆகையால் எதையும் ஆராய்ந்தறியவேணும்.

இவ்விதம் பெரியோர்கள் பக்கலில் நாம் வர்த்திக்கவேண்டிய விதத்தை உபதேசிக்கிறது உபநிஷத்து:— 'யாநி அஸ்மாகம் ஸுசரிதாநி தாநி ஸேவிதவ்யாநி । நோ இதராணி ।' ஆசார்யன் சொல்லுகிறான்:— என் ப்ரிய சிஷ்யனே! எங்களிடம் ஆசாரங்களில் தேச கால மாறுபாடுகளினால் சில வழுக்கள் இருக்கலாம். அவைகளையும் சேர்த்து நீ பின்பற்றாதேகொள் குற்றம் கழித்து குணமே பெருக்குவாய் என்று. ஆகையால் ஓரளவுக்கு உட்பட்ட ஆராய்ச்சி பெரியோர்கள் பக்கலில் செய்யவடுக்கும். ஆகையால் ப்ரக்ருதத்தில் அடியேனிடம் அந்த ஸ்வாமி தெரிவித்த கருத்துக்களைச் சிறிது ஆராய்வோம்.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்தில் ஸாத்விகத்யாகத்தை, ராஜஸத்யாக, தாமஸத்யாகங்களிலும் வேறுபட விளக்கியருளும்போது ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் இவ்விதம் ஸாதிக்கும்படி இருக்கிற்து:— இப்பகவத்ப்ரீதிக்கு மோக்ஷமும், பலமாகக்கோலாதே, முன்பே ப்ரபத்தியால் பிறந்த பரமகாருணிகன் ப்ரஸாதத்தாலே மோக்ஷம் ஸித்தமென்று நினைத்து, முக்தபுருஷன் பண்ணும் கைங்கர்யம் போலவும் ஆரோக்யமுள்ளவன் பால்வார்த்துண்பது போலவும் நாம் கைங்கர்யம் செய்ய வேண்டும். இதுவே ஸாத்விகத்யாகத்தின் எல்லை நிலமாகக் கடவது. இது பசித்துண்பதுபோல். அல்லாதபோது 'ஒட்டத்துக்கு அப்பம் தின்பது போலாம்' என்று. பசித்தபோது 'உண்ணவேணும்' என்ற ஒரு உணர்ச்சியே காரணமாக உண்பதுபோல் ஸ்வாமி கைங்கர்யம் செய்யவேணும் என்ற ப்ரீதிமாத்ரத்தினால் ப்ரேரிக்கப்பட்டு வேறொரு பலத்தைக் கோலாதே கைங்ர்யம் செய்ய அமையும்.

வேறு பலத்தைக் கருதி கைங்கர்யம் செய்தல் வயிறு நிறைந்திருந்தும் பந்தயத்திற்காக பத்தெட்டு அப்பங்களை பக்ஷணம் செய்யும் பேராசை நிலையையே ஒக்கும். அதில் யாதொரு ரஸமும் இல்லை என்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் பொதுவிலே அறியக்கிடக்கிறது.

இங்கு ஸ்ரீ தேசிகன் திருவுள்ளத்தில் ஒரு கதை ஓடுவதாகவும் அக்கதை பல பெரியோர்களால் பலவிடங்களில் எடுத்துக் கையாளப் பட்டுள்ளது என்றும் முன்பு சொன்ன அந்த அயலூர் பெரியவர் அடியேனிடம் கூறினர். அது இவ்விடத்தில் பொருத்தமுடையதா என நாம் ஆலோசிக்கவேணும். ருதுசாந்தி முஹூர்த்தமாகி தனித்து மணவரையில் விடப்பட்ட புதியதம்பதிகள் இருவருக்கு ஒருரில் ஒருகால் விசித்ரமான போட்டி ஒன்று நிகழலாயிற்று. அங்கு பண்ணிவைக்கப்பட்ட பலவித பணியாரங்களை அவர்கள் தின்றுவர கடைசியில் மிகுந்த ஓர் அப்பம் யாருடைய பங்கு என்று அவர்களுள் விவாதம் விளைந்தது. அதைத் தவிர்க்க, நம்மிருவரில் யார் நெடுநேரம் தூங்கி கடைசியில் விழித்தெழுகிறாரோ அவருக்கே அது உரியது' என இருவரும் ஒப்பந்தம் செய்துகொண்டனர். பிறகு இருவரும் அதை எவ்விதமேனும் அடைந்தே தீருவது என்ற மன உறுதியுடன் உறங்கச் சென்றனர். இவ்வித மன ஊளச்சலில் உறக்கம் அவர்களுக்கு எங்கிருந்து வரும்? இரவும் நீண்டு வளர்ந்தது. முடிவில் பொழுதும் புலர்ந்தது. காலைக் கதிரவனும் கடலிலெழுந்து வந்துதித்தான். தம்பதிகள் மிகவும் களைப்புற்று அயர்ந்து தூங்குவதாக அருகிருப்போர் முதலில் நினைத்தனர். பிறகு நெடுநேரமாகியும் அவர்கள் விழித்தெழாமற்போகவே, மனதிற்சஞ்சலம் கொண்டு மணவரையின் கதவைத் தட்டித் திறந்து, உட்சென்று, உடலைப் புரட்டி உயிரிருக்கிறதா என உறவினர்பார்க்கலாயினர். புது மணத் தம்பதிகளோ தங்களுள்ளத்தை மேன்மேலும் கெட்டித்து மூச்சடக்கி, பேச்சற்று பந்தயத்தில் தானே வெற்றிபெற வேணும் என்ற அவாவினால் அசைவற்றுக் கிடந்தனர். பந்துக்கள் என் செய்வார்? ஐயோ என்று இறங்கி அழுது புலம்பி அநந்தரம் செய்யவேண்டிய கார்யங்களுக்கு ஏற்பாடு செய்வார் ஆயினர். எல்லாம் ஆயிற்று. ஆண்மகனை அக்னியில் வைத்துப் பிறகு பத்நிப் பெண்ணை வைக்க நினைத்தனர். பர்த்தாவின் உடலில் தீ உரைத்ததும் 'உச் ஐயோ' என்று உதரித்தள்ளி வெளியில் குதித்தான். இதைக் கேட்டதும் பக்கத்தில் தயாராகப் படுக்கவைத்திருந்த பெண்ணுருவமும் தத்க்ஷணத்திலேயே உணர்வுற்று உத்ஸாஹம் கரைபுரள, ஆ! அப்பம் என்னுடையதே, விவாதத்தில் வெற்றி பெற்றவள் யானே' எனக் கூவிக் குதித்து வந்தது. அப்பொழுது இதொன்றும் புரியாது வாயடைத்து ப்ரமித்துப்போன பந்துக்கள் சிறுகச் சிறுக இவர்களைக் கேட்டு விஷயமறிந்து விலாவறச் சிறித்துப்போனார்கள் என்பதாகக் கதை.

இக்கதைதான் 'ஒட்டத்துக்கு (பந்தயத்திற்கு) அப்பம் தின்பார் போல' என்றவிடத்தில் ஸ்வாமி தேசிகனுக்குக் கருத்தில் திகழ்கிறது. இதுவே அங்கு உசிதம். யாரும் இதைக் கவனித்து எழுதவும் சொல்லவும் காணோம்' என்று அந்த ஸ்வாமி ரொம்பவும் உணர்ச்சியுடன் உரைத்தார். அந்த ஸ்வாமியின் நல்ல எண்ணத்தை நாம் ஸந்தேகிக்கவில்லை. மேலும் கொண்டாடவும் செய்கிறோம். ஆயினும் இக்கதை அவ்விடத்திற்குப் பொருந்தாது என்றே நாம் கூறவேண்டியதாகிறது. இக்கதையில் வரும் தம்பதிகள், அப்பம் பரிசு பெறும் போட்டிக்காக, மேன்மேலும் விழுந்து தூங்குகிறார்கள். ஸ்வாமி தேசிகன் வாக்யத்திலோ வேறு பொருள் பரிசு பெறும் போட்டிக்கு அப்பம் மேல் விழுந்து தின்னப்படுகிறது. 'ஒட்டத்துக்கு அப்பம் தின்பார் என்றல்லவோ அங்கு ஸ்ரீஸூக்தியுள்ளது. ஆகையால் கதைத் தம்பதிகள் ஒட்டத்துக்கு அப்பம் தின்பவர் அல்லர். அப்பம் தின்பதற்காக ஒட்டாரம் செய்து உறங்கிக்கிடந்தவரே, என்று நாம் நன்கு இங்கு பகுத்தறியவேண்டியதாகிறது. இவ்விதம் இருக்கும்போது இக்கதையை இங்கு ஸ்வாமி தேசிகன் கருதினர்

என்பது பொருந்தாது என்றே அடியேன் அபிப்ராயம்.

அவர்சொன்னமற்றொரு விஷயம்பாடபேதத்தைப் பற்றியதே. பொருள் பற்றியதன்று. பரிகாவிபாகாதிகாரத்தில் 'இப் ப்ரபத்தியில் ஒருத்தனுக்கு மஹாவிச்வாஸம் பிறக்கையில் அருமையை நினைத்து 'கல எள் கட்டு போய் கல எண்ணெய் ஆயிற்று' என்று எம்பார் அருளிச் செய்தாரிறே' என்பது ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்தி. பகவானிடத்தில் கட்டளைப்பட்ட பக்தியோகத்தைச் செய்ய இயலாதவனுக்கு ப்ரபத்தியைச் செய்யும்படி சாஸ்த்ரம் விதிக்கிறது ப்ரபத்தியைச் செய்வது எளிதாகையால் பக்தியில் அசக்தனுக்கும் அது அமைந்திடும் என்று சாஸ்த்ரம் கருதிற்று போலும். ஆனால் ப்ரபத்தியில் ஒருவனுக்கு மஹாவிச்வாஸம் (பூர்ணநம்பிக்கை) உண்டாவது எளிதல்ல. இவ்வித விசித்ர நிலையை நாம் பார்க்கும்போது மேற்கண்ட ஸம்பவம்தான் நினைவிற்கு வருகிறது. மந்த்ர ஸித்தியினால் சிலர் க்ஷுத்ர தேவதைகளை வசப்படுத்தி சொல்லிற்று செய்யும்படி அவைகளை நிறுத்தி வைத்துக்கொள்வது உண்டு. அங்ஙன் ஒரு மாந்த்ரிகன் ஒரு ப்ரம்மராக்ஷஸ்ஸை தன் வயப்படுத்தி ஏவல் தேவை செய்யவைத்து அடிக்கடி 'அதைக் கொண்டு வா, இதைச் செய்' என்றவாறு அதைத் துன்புறுத்தி வந்தான். அதுவும் வெகு நாள் பொறுத்துப் பார்த்தும், மாந்த்ரிகனுடைய உபத்ரவந்தாளாமல் ஒரு நாள் அவனைக் கிட்டி 'உனக்கு ஏதாகிலும் கனக்க உதவி செய்துவிடுகிறேன். என்னை விடுதலை செய்வாயாக. உனக்கு வேண்டியதென்ன?' என்று கேட்டது. அப்போது பேராசை கொண்ட அம் மாந்த்ரிகன் 'எனக்குக் கல எள் கொணர்ந்து கொடு' எனக் கட்டளையிட்டான். அவன் இருந்த தேசத்திலேயே எள் என்ற நாமதேயமும் கிடையாது. அது கேட்ட ப்ரம்மராக்ஷஸ் அந்தோ! என் செய்யும். உடனே அது மறுபடி அவனைக் கால்கட்டி மன்றாடப் புகுந்து, தன்னால் அது செய்ய முடியாமையை வெளியிட்டு, வேறு கட்டளை இட வேண்டிக்கொண்டது. அப்போது அம்மாந்த்ரிகன் 'போகட்டும் அது செய்யகில்லாயாகில் கல எண்ணெயையாகிலும் சீக்கிரம் கொணர்ந்து சேர்' என்று கட்டளையிட்டானாம். கல எள்ளே கிடையாதபோது கல எண்ணெய் எங்ஙனம் கிட்டும்? இவ்விதமேயுள்ளது, பக்தியோகத்தில் அசக்தனுக்கு சாஸ்த்ரம் ப்ரபத்தியைச் செய்ய விதித்ததும். அதில் பூர்ண நம்பிக்கை அமைவது அருமையாகவன்றோ இருப்பது' என்றிவ்வாறு எம்பாரென்னும் பூர்வாசார்யரியம்பினதாக ஸ்வாமி ஸாதிக்கும்படி.

இதில் 'கல எள் கட்டு போய் கல எண்ணெய்' என்றவிடத்தில் 'கல எள் கெட்டு கல எண்ணெய்' என்றே ப்ராசீன பாடம்' என்று அவர் சொன்னார். இதை நன்கு நாம் பராமர்சித்தால் இப்பாடம் அழகாகவேயுள்ளது. இப்பொழுது வழங்கிவரும் பாடத்திலும் இழுக்கொன்றுமில்லையாயினும்; அதைவிட இது சிறந்தது என்பது ஸஹ்ருதயர் ஹ்ருதயத்தால் அறியவேண்டியதொன்று. ஆனால் தக்க ஆதாரமின்றி பாடங்களைப் புரட்டிக்கொண்டே இருப்பது பெரிய அபாயம். ஆகையால் அவர் காட்டிய பாடத்துக்கு எங்காகிலும் வேறிடத்தில் ப்ரயோகம் இருந்தால் அதை நாம் கவனிக்கவேணும்.

210736.

ஸ்ரீ:

மாலுகந்த மங்கையர்

உலகில் எல்லாவற்றையும் விட ஜ்ஞாநம் உயர்ந்தது. 'ஜ்ஞாநேந ஹீந: பசுபிஸ்ஸமாந:' என்று ஜ்ஞாந மற்றவனை மிருகங்களோடு ஒப்பிடுகிறார்கள்; 'வித்வான் ஸர்வத்ர பூஜ்யதே' அறிவுடையவர்கள் அனைவராலும் ஆதரிக்கப்படுகிறார்கள். ஜ்ஞாநஸம்பத்து இதர செல்வங்களையும் காக்கிறது. ஸங்கீதஜ்ஞாநத்திற்கு தனிப்பட்ட சிறப்புண்டு. இனிய குரலில் ஒருவன் பாடினால், தொட்டிலில் படுத்து அழும் குழந்தையும் தன் அழுகையை நிறுத்தி அப்பாட்டை அநுபவிக்கிறது. நம்பாடுவான் பரமனைப் பாடி பராங்கதி பெற்றதோடு பாபச் செயலால் ப்ரஹ்மராக்ஷஸஜன்மம் பெற்ற ஒருவனை அப் பாட்டின் மஹிமையால் கைதூக்கினது பார் முழுதும் பிரஸித்தம். ஆழ்வார்களும் பாடியே கண்டு களிக்கிறார்கள். 'இசை பாடிப்பாடிகண்ணீர்மல்கி... நாடி நாடி நரசிங்காவென்று' நம்மாழ்வார் பாடுகிறார். ஆண்டாளும் 'வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்பதால், முன் செய்த பாபங்களும் வரப்போகின்றவைகளாயும் வர்த்தமானங்களாயும் இருக்கிற அபராதங்களையும் சொல்லி, அவைகள் பகவானை மனத்தில்வைத்துப் பாடினால் தீயில் போட்ட பஞ்சு போல் மறைந்துவிடுமென்கிறாள். பிராட்டி பற்றிய வழியையே இவர்களும் பின் பற்றி அநுபவிக்கிறார்கள். சக்ரவர்த்தித்திருமகனைப் பிரிந்து அசோகவனத்தில் சிம்சுபாவ்ருக்ஷத்தினடியில் ராக்ஷஸிகளின் கொடுமையாலேற்படும் துயரம் தாளாமல் வருந்தி நிற்கும் பிராட்டியைத் திருவடி (ஹநுமான்) ஆச்வாஸப்படுத்த, பிராட்டியும், 'காத்ரை: ஶோகாபிகர்சிதை:, ஸம்ச்ப்ருசேயம் ஸகாமாஹம்' (நீர் எது செய்தால் புருஷச்ரேஷ்டனான என் மணாளனை சோகத்தால் இளைத்த இந்த என் சரீரத்தால் ஸ்பர்சிப்பேனோ; (இரு சரீரங்களும் ஒன்றோடொன்று சேர்ந்து கொள்ள வேணும்) அப்படி தயை செய்யவேணும்) என்று எதிரில் நிற்பவர் பரபுருஷனாயிற்றே, அதிலும் ப்ரஹ்மசாரியாயிற்றே என்பதையும்மறந்து திருவடியைவேண்டுகிறாள். இதையே மனத்திற்கொண்டு கோபஸ்த்ரீகளும் கண்ணனின் வேணுகானத்தைக் கேட்டு, காலிலிடுவதைக் கையிலும், கைவளையைக் காதிலும் மாட்டி, வஸ்த்ரங்களைத் தலைகீழாயுடுத்தி மெய்மறந்து கண்ணனிருப்பிடம் வந்து தங்களை ஏற்றுக்கொள்ளப் ப்ரார்த்திக்கிறார்கள். (தந்நோ விதேஹி கரபங்கஜமார்த்தபந்தோ! தப்தஸ்தநேஷு ச சிரஸ்ஸு ச கிங்கரீணாம்) ஜலக்கரையில் தபித்துக்கொண்டிருக்கும் மத்ஸ்யங்களை ஜலஸம்பந்தத்தால் காப்பது போல எங்களையும் உம்முடைய சரீரஸ்பர்சத்தால் காக்கவேணும் என்று ப்ரார்த்தித்தார்கள். நீங்கள் இப்படி வீடு, ஸம்ஸாரம் முதலியவைகளை விட்டு வரலாமா என்று கண்ணன் கேட்க, (ஸ்ரீர்யத்பதாப்புஜ ... ... தத்வத் வயம் ச தவ பாதரஜ: ப்ரபந்நா:) எவளுடைய கடாக்ஷலேசத்திற்கு ஸகல தேவதைகளும் காத்துக்கொண்டிருக்கிறார்களோ; அந்த பூமங்கையையே பின்பற்றுகிறோம் என்கிறார்கள் கோபிகள். இவர்களுள் ஒருவள், (தம் காசிந்நேத்ரரந்த்ரேண ஹ்ருதி க்ருத்வா நிமீல்ய ச, புளகாத்யுபகூஹ்யாஸ்தே) க்ருஷ்ணனைத் தன் கண்வழியாக ஹ்ருதயகமலத்திற்கழைத்து (தன் இஷ்டபுருஷனை வீட்டில் அழைத்துக் கதவைத் தாளிடுவது போல்) கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமானாகையால், எங்கு தன்னை ஏமாற்றிவிட்டு ஓடிவிடுவானோ என்று பயந்து, கண்களை கெட்டியாக மூடி, மயிர்க்கூச்சல் நிறைந்த தேஹத்தினால் அணைகிறாள். கண்ணனின் சேஷ்டைகளைக் கண்டு கோபித்து ஒரு கையில் அவனைப் பிடித்துக்கொணடு கயிற்றினால் உரலில் கட்ட ப்ரயத்னப்படுகிறாள் யசோதை. கயிறு இரண்டங்குலம் குறைந்தது; மற்றொரு கயிறு எடுத்துக்கொண்டு வந்தாள்; அதுவும் அப்படியே இரண்டங்குலம் குறைந்தது. இப்படி தன் க்ருஹத்திலுள்ள எல்லா கயிறுகளையும் கொண்டு வந்து கட்டியும் போராமற்போகவே கோபிகளும் யசோதையும் ஆச்சர்யப்பட்டு நிற்கிறார்

கள். தன் தாய் தன்னைக் கட்டுவதற்கு வேர்வையால் உடம்புநனைந்து, கூந்தலவிழ்ந்து புஷ்பங்கள் கீழே விழ, வஸ்த்ரம் தளர, படும் ச்ரமத்தைப் பார்த்துத் தானே தன்னைக் கட்டிக்கொண்டார். இவ்வளவு ச்ரமப்பட்டும் உரலுடன் வெளிக்கிளம்பி விட்டார். இந்த கோபஸ்த்ரீயோ ஸுகமாக மனத்தில் கட்டினாள். கண்ணனால் வெளியில் வரமுடியவில்லை. இதை நினைத்து இவளை யோகியோடு ஒப்பிடுகிறார் ஸ்ரீ சுகர் 'யோகீவாநந்தநிர்ப்பரா, என்று. ஆநந்தரூபனை மனத்தில் நிரைத்திருப்பதால் இவளும் ஆநந்தமயமாகிவிட்டாள். ஆண்டாளும் திருவாசல்காப்பானை அநுமதி கொண்டு புகுந்தவளவிலே முதற்கட்டில் சயனித்திருக்கும் நந்தகோபரையும் பிறகு யசோதைப் பிராட்டியையும் எழுப்பி, அவர்களால் உங்களவன் நப்பின்னைப் பிராட்டியோடே உள்ளே திருப்பள்ளிமெத்தையிலே சயனித்துக்கொண்டிருக்கிறான், நீங்களே அங்குசென்று அழைத்துச்செல்லுங்கள் என்ன, பின்பு இவர்கள் பயமின்றி திருப்பள்ளியறையின் வாயிலளவும் சென்று கண்ணனை எழுப்புகிறார்கள். எழுந்து வராததைக் கண்டு, நாமிருவரும் ஒரு ஜாதீயராகையாலும், நம்முடைய ஸுகதுக்கங்களும் ஒன்றாகையாலும் நீயாவது செந்தாமரைக்கையால் வளையொலிப்ப வந்து திறவாய் என்று நப்பின்னைப்பிராட்டியை ப்ரார்த்திக்கிறார்கள். அவளும் என்னைக் கண்ணன் கட்டியணைத்து வெளியில் செல்ல விடாமல் செய்கிறானே, எப்படி நான் திறப்பது? என்ற பாவனையுடன் 'நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா வாய் திறவாய்' என்கிறாள். எங்கள் விஷயத்தில் ஒரு வார்த்தையாவது தயவு செய்தாலாகாதோ என்ன, அதையும் பெறாதே இப்படி அநேக விதத்தில் கஷ்டப்பட்டுக் கண்ணன் கிட்டாததைக் கண்ட ஆண்டாளும், காமோத்தீபகமான பயனற்ற அவயவவிசேஷம் இருக்கவேயன்றோ நாம் இவ்வளவு கஷ்டப்படுவது; இதைப் பிடுங்கி அவன் மார்பில் எறிகிறேன் என்கிறாள். கிழங்கிருந்தால் மறுபடியும் முளைத்து விடும் என்று அதிசங்கையுடன், 'பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும் அள்ளிப்பறித்திட்டவன் மார்பிலெறிந்து என்னழலைத்தீர்வேனே' என்கிறாள். ஆழ்வார்களும் தாங்களும் பெண்களாகப் பிறந்து மன்மதமன்மதனான பரமனை அநுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று குறை படுகிறார்கள். வஸ்துவின் மஹிமையது. புமான்களெல்லாம் தாங்கள் பெண்ணாகப் பிறந்து சக்ரவர்த்தித் திருமகனை அநுபவிக்க ஆசைப்படுகிறார்கள் என்கிறார் ஸ்ரீ வால்மீகிமஹரிஷி. ஆகையினால் தன்னைப் பெண்ணாகப் பாவித்து 'என் முலையாள ஒரு நாள்' என்கிறார் ஒரு ஆழ்வார். பராங்குசனும், 'ஸ்த்ரீப்ராயமிதரத ஸர்வம்' என்பதைத் திருவுள்ளம்பற்றி காந்தனைப் பிரிந்த காமினியைப்போல் பறவை முதலியவற்றை தூதுஅனுப்பி பிரிவாற்றாது தலைவன் தன்மைகளை அநுகரித்து தரிக்கப்பார்த்து, எம்பெருமான் விளம்பித்து வரக் கண்ட தலைவி, உமக்கு வேண்டிய மற்றோர் ஸ்த்ரீ அங்கிருக்க இங்கே என்ன காரியமென்று திரஸ்கரிக்க, ப்ரணயகலஹத்தில் தன்னை வசீகரித்ததையும், அலர்மேல்மங்கையைப் புருஷகாரமாகப் பற்றி, திருவேங்கடமுடையான் திருவடிகளை ஶரணம் புகுந்து அவன் காத்ரஸம்ச்லேஷம் பெறாதே 'தூமலர் கண்ணிணை முத்தஞ் சோரத் துணைமுலை பயந் தேன் தோள்கள் வாட' என்று கலங்கிக் கடைசியில் தான் பகவானை அநுபவித்ததைப் பலபடி பாடுகிறார். ஸர்வவிதத்திலும் உயர்ந்த மார்கழி மாதத்தில் இனிய குரல் கிடைத்த பல புண்ணியவான்கள் பக்தியுடன் பாடிப் பணிசெய்தார்களாகில், அங்கு பகவானும் புல்லாங்குழலூதி அவர்களுடன் பரவசமாகி நிற்கிறான் என்பது திண்ணம். இதை பகவானே நாரதரைப் பார்த்து, 'நாஹம் வஸாமி வைகுண்டே ந யோகிஹ்ருதயேऽபி வா | மத்பக்தா யத்ர காயந்தி தத்ர திஷ்டாமி நாரத' என்று வைகுண்டம் யோகிகள் மனது இவைகளைவிட தன் பக்தர்கள் பாடிப்பணியுமிடத்தை வாஸஸ்தலமாகக் கொள்கிறேன் என்கிறார். இப்படி காமத்தால் நற்கதி கிடைக்குமா என பரீக்ஷித் மஹாராஜா கேட்க, 'சிசுபாலன் எந்த விதத்தில் ஸித்திபெற்றான் என்பதை முன்னமேயே உனக்குச் சொல்லி யிருக்கிறேன். பகவானிடம் உள்ளன்பு கொண்ட இவர்கள் விஷயமாய் கேட்பானேன்! ஒவ்வொரு மரங்களிலும் மரவுரி க்ருஷ்ணாஜினங்களுடன் ஸ்ரீ ராமனையே ஸேவித்த மாரீசனைப்போல எக்காரணத்தினாலாகிலும் நித்யமாக பகவானை நினைப்பவர்கள் நற்கதியடைவது திண்ணம்' என்று ஸ்ரீ சுகர் கூறியுள்ளார். இவ்வாறு மங்கையர் பக்தியுடன் பாடியே முனிவர்கள் த்வயத்தினால் உகக்கும் திருமாலை உகக்கச் செய்தன ராகையாலே 'கலௌ ஸங்கீர்த்ய கேசவம்' என்று பகவந் நாமஸங்கீர்த்தனம் சிறந்த உபாயமாகிறது.

ஸ்ரீ:

இரண்டு தேசிக ரத்நங்கள்

(ஸம்-15 12-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இனி கிடாம்பி ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியைப் பார்ப்போம். திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருந்த இந்த மஹான் தமக்கு இருபது பிராயம் நிரம்பும் முன்பே ஜ்ஞாதவ்யங்களில் கொஞ்சமும் பாக்கியில்லாமல் எல்லாவற்றையும் நன்ருக அறிந்து பஞ்சகாலபராயணராய் இருக்க அப்போது கருடாத்ரி குகையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிங்கப்பிரான், இவரே தம்மைத் திருவாராதனம் பண்ணத் தகுந்தவர் என்று ஸங்கல்பித்தருளினன். இந்த எம்பெருமான் ஸ்ரீ ஸ்வாமியின் ஸ்வப்நத்தில் தோன்றி 'ஸ்ரீநிவாஸாசார்யரே! நீர் நம்மைத் திருவடி தொழுவதற்கு அஹோபிலத்திற்கு வாரும். இனி நீர் தான் நம்மை ஆராதிக்கவேண்டும். இதன் பொருட்டு உமக்கு நாமே துரியாச்ரமம் தருகிறோம்' என்று நியமித்தருளினர். எம்பெருமானுடைய இந்த நியமனத்தைக் கேட்டருளிய ஸ்ரீ ஸ்வாமி பரமாநந்தபரிதரானர். பொழுது விடிந்தவுடன் இந்த வ்ருத்தாந்தம் எல்லாரிடமும் பரவியது. எல்லாரும் ஆனந்தமடைந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமி தனது ஆசார்யனுகிய கடிகாசதம் அம்மாளிடம் விண்ணப்பித்தருள அவரும் எம்பெருமான் செய்தருளிய கருணையை நினைத்து ஆச்சரியமடைந்து எம்பெருமானுடைய நியமனப்படியே நடந்து கொள்ளுமாறு ஸ்ரீ ஸ்வாமிக்கு அநுமதி தந்தருளினர். உடனே ஸ்ரீ ஸ்வாமி அஹோபிலத்திற்கு யாத்திரை புறப்பட்டார். தெய்வமல்லால் செல்லவொண்ணுச் சிங்கவேழ்குன்றத்திற்கு எழுந்தருளுகிற இந்த மஹான் ஒரு அவதாரவிசேஷமே என்றும் இவருக்கு எம்பெருமான் அருள் புரிந்தது போல் வேறொருவருக்கும் புரிந்ததில்லை என்றும் பலவிதமாகப் போற்றிக்கொண்டு அவரைத் தொடர்ந்து ஒரு பாகவத கோஷ்டியும் சென்றது. பரமபதத்தைச் சூழ்ந்து விளங்கும் விரஜையாற்றைப் போல ஸ்ரீமதஹோபிலத்தைச் சூழ்ந்து பெருகும் பவநாசினியாற்றை அடைந்ததும் ஸ்ரீஸ்வாமி அன்றைய அனுஷ்டானத்தை அங்கேயே செய்தருளினர். அனுஷ்டானம் பூர்த்தியானவுடன் ஸ்ரீ ந்ருஸிம்ஹனே ஒரு ஸந்யாஸி ரூபத்தோடு அவருக்கெதிரில் தோன்றி அவருக்கு ப்ரேஷமந்த்ரத்தை உபதேசித்து துரியாச்ரமத்தையும் அநுக்ரஹித்தருளினர். அவருக்கு அஹோபில ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் எருந்தருளியிருக்கும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய த்ரிதண்டம், காஷாயங்களையும் ப்ரஸாதித்து ஸ்ரீ சடகோபஜீயர் என்று தாஸ்யநாமத்தையும் தந்தருளினர். இவ்வாறு அவருக்கு சாஸ்த்ரங்களில் சொல்லிய க்ரமத்தில் ஸந்யாஸ ஆச்ரமத்தை அநுக்ரஹித்துவிட்டுப் பின்பு தமது திருக்கைகளில் உள்ள திருவாழி திருச்சங்குகளையே சிஷ்யவர்க்கங்களின் பஞ்சஸம்ஸ்காரத்தின் பொருட்டுக்கொடுத்து ஸர்ப்ரதிக்ராம நகரமும் சென்று ஆச்ரயிப்பவர்களுக்கு உஜ்ஜீவன வ்யாபாரங்களைச் செய்துவாரும் என்று நியமித்தார். அந்த திவ்யதேசத்தில் ஜ்வாலா ந்ருஸிம்ஹன், அஹோபில ந்ருஸிம்ஹன், லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் வராஹ ந்ருஸிம்ஹன், காரஞ்ஜ ந்ருஸிம்ஹன், பார்க்கவந்ருஸிம்ஹன், யோகாநந்தந்ருஸிம்ஹன், சத்ரவடந்ருஸிம்ஹன், பாவந ந்ருஸிம்ஹன் என்று ஒன்பது விதமான ரூபங்களோடு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ திவ்யமூர்த்திகளில் எந்த மூர்த்தியைத் தாம் ஆராதித்துக்கொள்வது என்று ஸந்தேஹப்பட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ ஜீயருக்கு ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஓர் அற்புத விளையாட்டைச் செய்து அந்த ஸந்தேஹத்தை நிவர்த்தி செய்தான். ஸ்ரீ ஜீயர் அங்கெழுந்தருளியுள்ள ஒன்பது எம்பெருமான்களையும் ஒரு சேர்த்தியில் எழுந்தருளப்பண்ணி அவர்களை ஆராதித்து ஆராதன ஸமாப்தியில் ஸேவித்து நிற்கும்போது அந்த

மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்
ஹன், ஒரு குழந்தை ஒரு பீடத்தின் மேல்
இருந்து கீழே நிற்கும் தன்னுடைய தாயார்
கையில் குதித்து மகிழ்வதுபோல், தொப்
பென்று ஸ்ரீ ஜீயருடைய நீட்டிய கைகளில்
குதித்தருளினார். கலியில் எம்பெருமான் தம்
முடைய அர்ச்சையின் வரம்பையுங்கடந்து
ஸ்ரீ ஜீயர் விஷயத்தில் செய்தருளிய பெரிய
அநுக்ரஹத்தை எப்படிக் கொண்டாடுவ
தென்று தெரியவில்லை. அவரைச் சூழ்ந்து
நின்ற பாகவதர்களெல்லோரும் ஆனந்தமே
லீட்டால் பரவசராகி நின்றார்கள். ஸ்ரீ ஜீய
ரும் ஆனந்தத்தால் உடலுருகிக் கண்ணீர்
பெருகிப் புளகித்து தம் கைகளில் குதித்த
எம்பெருமானை மார்போடணைத்துக்கொண்டு
பரவசராய் நின்றார். இத்தகைய விசேஷமான
அனுக்ரஹத்தோடு ஸ்ரீ ஜீயர் எம்பெருமானு
டைய கைங்கர்யத்தைத் தொடங்கினார். இந்த
மங்களகரமான ஆரம்பந்தான் இன்று உலகெல்
லாம் கொண்டாடச் சிறப்போடு விளங்கும்
ஸ்ரீமதஹோபிலமடரூபமாக இன்றும் விளங்கி
வருகிறது.

இவ்வாறு ஸ்ரீ தேசிகன் ஸ்ரீமதாதிவண்சட
கோப யதீந்த்ர மஹாதேசிகன் ஆகிய இரண்டு
திருநாமங்களையும் எம்பெருமான் தாமே வலிய
இழுத்து வந்து தம்முடைய கைங்கர்யத்துக்
காக நியமித்துக்கொண்டருளினார். இவ்விரு
வரும் பரம வைராக்ய நிதிகளாகத் திகழ்ந்தார்
கள். இவர்களுள் ஒருவரான ஸ்ரீ தேசிகன்
க்ருஹஸ்தராகவே இருந்துகொண்டு துறவிகளுக்
கும் எய்தலாகாத வைராக்கியத்தின் காஷ்டை
யையடைந்து விளங்கினார். மற்றவரான ஸ்ரீம
தாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்
உன்னருந் துறவுபூண்ட ஒருவராய்த் தன்னை
யுந் துறந்து நின்றார்.

இருவரும் நீண்டநாள் ஸம்ப்ரதாயத்திற்கு
உழைத்து அதைத் தழைக்கச் செய்தார்கள்.
இவர்களில் ஒருவர் கவிவாதிசிங்கமாய்த் திகழ்ந்
தார். மற்றவர் அழகிய சிங்கமாய்த் திகழ்ந்
தார். ஒருவர் வடமொழியிலும் தமிழிலும்
ஏராளமான க்ரந்தங்களை அருளிச்செய்து உப
கரித்தார். மற்றவர் இந்த க்ரந்தங்களையெல்
லாம் ஏராளமான சிஷ்யர்களுக்கு உபதேசித்து
அவற்றைப் பரவச் செய்ததோடு தம்முடைய
சிஷ்யர்களான ஸ்ரீமந்நாராயண யதீந்த்ர மஹா
தேசிகன், தோழப்பர் முதலிய வித்வான்களைக்
கொண்டு பல க்ரந்தங்களை செய்வித்தருளினார்.

வைராக்யநிதிகளாக விளங்கிய இந்த ஆசார்
யர்களைப் பெரிய ராஜாக்களெல்லாரும் கொண்
டாடிப் போற்றியதாகத் தெரிகிறது. ஸ்ரீ தே
சிகன் ம்லேச்சர்களுடைய உபத்ரவத்தால்
ஸ்ரீ ரங்கத்திலிருந்து வெளியே எழுந்தருளி
யிருந்த பெரிய பெருமாளைக் கொப்பணார்யன்
என்ற அரசனை நியமித்து, அவனைக்கொண்டு
ஸ்ரீரங்கத்தில் மறுபடியும் ப்ரதிஷ்டை பண்
ணியதாகத் தெரிகிறது. அதைப்போலவே
ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசி
கன் ஆழ்வார் திருநகரியில் சில பாஷண்டிக
ளால் ஒரு மலைச்சுனைக்குள் எறியப்பட்டிருந்த
ஆழ்வாருடைய திவ்யமங்கள விக்ரஹத்தைப்
பாண்டியதேசசத்து அரசனை நியமித்து அவ
னைக்கொண்டு மறுபடியும் ஸ்ரீ ஆதிப்பிரானு
டைய ஸந்நிதியில் ப்ரதிஷ்டை செய்து அந்த
எம்பெருமானாலும், ஆழ்வாராலும் மிகவும்
பஹுமானிக்கப்பட்டார். இரண்டு திருநாமங்
களும் ஸ்ரீபகவத்ராமாநுஜதர்சனத்தை எல்
லாப் படிகளாலும் தழைத்து வளரச் செய்தார்
கள். ஸ்ரீபாஷ்யத்தைப் பல ஆவ்ருத்திகள்
சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ப்ரஸாதித்தார்
கள். ஸ்ரீபகவத்ராமாநுஜதர்சனத்தில் குறை
கூறிய வாதியர்களையெல்லாம் வாதங்களில்
வென்று தர்சனத்தை நிலைநாட்டினார்கள்.

இரண்டு திருநாமங்களும் பகவானை அடை
யக்கூடிய அழிவில்லாத அழகான ஸோபானங்
களைக் கட்டி நமக்குத் தந்துள்ளார்கள். ஸ்ரீதே
சிகன் விவேகம், நிர்வேதம், விரக்தி, பீதி, ப்ர
ஸாதஹேது, உத்க்ரமணம், அர்ச்சிராதிமார்க்
கம், திவ்யதேசப்ராப்தி, மோக்ஷாநுபவம்
என்று படிகளுள்ள பரமபதஸோபானத்தை
அருளிச்செய்து அனைவரும் பரமபதநாதனை
அடையும் ஸோபானமாக நமக்குத் தந்தார்.
ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசி
கன் 'மாயாவீ பரமாநந்த: த்யக்த்வா வைகுண்
டமுத்தமம் | ஸ்வாமி புஷ்கரிணீ தீரே ரமயா

ஸஹ மோததே ॥' என்றபடி வைகுண்டநாதன் வைகுண்டத்தை விட்டு அதைக் காட்டிலும் அதிகமாக ப்ரீதிகொண்டு லீலைகள் புரிந்து மகிழும் வைகுண்டாத்ரியாகிய திருமலைக்கு அழிவில்லாத ஸோபானத்தைக் கட்டித் தந்தார்.

இவ்விரு ஆசார்யர்களும் பலவிதமாகச் செய்தருளிய தொண்டுகளை யெல்லாம் குருபரம்பரையில் ஸேவிக்கும்போது நமக்கு ஒரு விஷயம் மனதில் தோன்றுகிறது. ஸ்ரீ தேசிகன் ஆயிரக்கணக்கில் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை அருளிச் செய்திருக்க ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் ஒரு க்ரந்தங்கூட அருளிச்செய்ததாக குருபரம்பரையிலிருந்து தெரியவில்லை. பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களை ப்ரவசநம் பண்ணியும் வாதத்திற்கு வந்த தூஷகர்களை வாதப்போர்களில் வென்று வாகை சூடியும், சிஷ்யர்களைக்கொண்டு க்ரந்தங்களைச் செய்தும் ஸம்ப்ரதாயத்தை நிலைக்கச்செய்தது உண்மைதான். ஆயினும் தாமே க்ரந்தங்களை அருளிச்செய்யவில்லை. அவ்வாறே ஸ்ரீமதாதிவண் சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருமலைக்கு ஸோபானம் கட்டுவது, காஞ்சீபுரத்தில் ஆயிரக்கால் மண்டபம் கட்டுவது, ஆழ்வார் திருநகரியிலும், மற்ற திவ்யதேசங்களிலும் கோபுரம், மண்டபம் முதலிய கைங்கர்யங்களைச் செய்வது எம்பெருமான்களுக்கு த்ரவ்யங்களும், திவ்யாபரணங்களும் ஸமர்ப்பிப்பதென்பதுபோன்ற பல கைங்கர்யங்களைச் செய்தருளியிருக்க இத்தகைய கைங்கர்யங்களில் ஸ்ரீ தேசிகன் அதிகமாக ஈடுபடவில்லை என்று தோன்றுகிறது. ப்ரஹ்மசாரிக்கு ஏராளமான த்ரவ்யங்களை வரவழைத்துக் கொடுத்த ஸ்ரீ தேசிகனுக்கு கைங்கர்யங்கள் செய்வதானால் த்ரவ்யங்கள் கிடைக்காதா? அல்லது ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுக்கு ஸ்ரீ தேசிகனுக்கு ஸரிநிகர் ஸமானமாக க்ரந்தங்கள் அருளிச்செய்ய முடியாதா? த்ரவ்யங்களும் கிடைக்கும். க்ரந்தங்களும் அருளிச்செய்ய முடியும். ஆயினும் வேண்டுமென்றே இந்த ப்ரவ்ருத்திகளிலிறங்கவில்லை.

'கர்மண்யகர்ம ய: பஶ்யேத் அகர்மணி ச கர்ம ய: । ஸ புத்திமாந் மநுஷ்யேஷு ஸ யுக்த: க்ருத்ஸ்நகர்மக்ருத் ॥' என்பது கண்ணனுடைய அருள்மொழி. எவனொருவன் மோக்ஷஸாதனமான கர்மயோகத்தைச் செய்யும்போது அந்தக்கர்மயோகத்தில் ஜ்ஞானத்தையும் அவ்வாறே ஜ்ஞானயோகத்தைச் செய்யும்போது அதில் கர்மயோகத்தையும் அடங்கியிருப்பதாக அறிகிறானோ அவனே மநுஷ்யர்களில் மோக்ஷத்திற்கேற்ற ஸர்வ சாஸ்த்ரார்த்தங்களையும் அறிந்தவனும் ஸர்வ சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட கர்மாக்களைச் செய்தவனாகவும் ஆகிறான் என்று இதன் பொருள். ஆகையால் கைங்கர்யமாகிற கர்மாவும், ஜ்ஞானமும் ஒன்றுக்கொன்று விருத்தமானவை அல்ல. ஒன்றோடொன்று பிணைந்தவைகளேதான். இரண்டும் பகவானுடைய ஆராதனங்கள்தான் ஸ்ரீ தேசிகன் ஜ்ஞாதவ்யங்களையெல்லாம் தமது க்ரந்தங்களில் அருளிச்செய்து அதனால் பகவானை ஆராதித்தார். ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் மிகவும் ச்ரமஸாத்யமும் பஹுத்ரவ்யஸாத்யமுமான பெரிய கைங்கர்யங்களைச் செய்து பகவானை ஆராதித்தார். ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸுதைகளால் (சுண்ணாம்பு முதலிய த்ரவ்யங்கள்) கோவில் கட்ட, ஸ்ரீமத்வேதாந்ததேசிகன் ஸூக்தி ஸுதைகளால் (அம்ருதங்கள்) ஸம்பிரதாயக் கோவில் கட்டினார். இதனால் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரர் 'கர்மடர்' என்று நாம் சொல்லவில்லை. அவருடைய வாக்கைங்கர்யங்களும், வாதப் போர்களும் இல்லாமல் நமது தர்சனம் நிலை பெற்றிருக்காது. அவர் இத்தகைய ப்ரஹ்மாண்டமான மண்டப, கோபுர கைங்கர்யங்கள் செய்தருளியது விலக்ஷணமாக விளங்குகிறதென்று காட்டவே நாம் இதைக் குறிப்பிட்டோம்.

இந்த இரண்டு ஆசார்யாத்கங்களும் இன்று தமது கீர்த்தியாகிற சரீரத்தினால் விளங்கி வருகிறார்கள். அவர்களுடைய அவதார ஸம்பந்தம் பெற்ற புனித தினங்களில் அவர்கள் செய்தருளிய மகத்தான உபகாரங்களைநினைத்து க்ருதஜ்ஞதையை அனுஸந்திப்பது நமக்கு ப்ராப்தம். நிற்க அவர்கள் ஒப்பற்ற ஸம்ப்ரதாயக் கோயிலைக் கட்டி அதை நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார்களல்லவோ? இப்போததை

ஸ்ரீ:

ராமானுஜனை யநுபவிக்கும் ராமானுஜன்

(ஸம்-15 12-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இந்த்ரஜித்து மாயாஸீதையை வதம் செய்வதுபோன்ற ஒரு வஞ்சனையால் ஸ்ரீ ராமனை மோஹிக்கச் செய்து நிகும்பிலாயாகத்துக்குச் சென்றவுடன் லக்ஷ்மணன் ராமனை அம்மாயையிலிருந்து விடுவிக்க எண்ணிப் பேசுகிறார்:-

'तदद्य विपुलं वीर दुःखमिन्द्रजिता कृतम् ।
कर्मणा व्यपनेष्यामि तस्मादुत्तिष्ठ राघव ॥
उत्तिष्ठ नरशार्दूल दीर्घबाहो दृढव्रत ।
किमात्मानं महात्मानमात्मानं नावबुध्यसे ॥'

அண்ணா! எழுந்திரும். இந்த்ரஜித்து செய்த வஞ்சனையை நான் அவனை வதம் செய்து என் கார்யத்தினால் போக்கடிக்கிறேன். தாங்கள் தங்கள் ஸ்வரூபத்தை அறியவில்லையா? என்று ஸமாதானம் செய்து யுத்தத்துக்குக் கிளம்புகிறார். பின்பு யுத்தத்திலும் 'धर्मात्मा सत्यसन्धश्च रामो दाशरथिर्यदि । पौरुषे चाप्रतिद्वन्द्वः शरैनं जहि रावणिम्' என்ற மந்த்ரத்தால் இந்த்ரஜித்தை வதம் செய்து, பகவானுக்கு குத்ருஷ்டிகளால் ஏற்படும் தோஷங்களைப் பரிஹரிக்கிறார். ஸ்ரீ ராமன் தர்மாத்மா அன்று என்று தூஷிப்பவர்கள் இப்பொழுது அதிகமாகி வருகிறார்கள். ராமன் ஸ்த்ரீவதம் செய்தவர், யுத்தத்தில் பின் வாங்கினவர், வாலியை அநீதியாகக் கொன்றார் என்று தூஷிக்கிறார்கள். ராமன் கீழ்ச்சொன்னபடி இம் மூன்று தோஷங்களும் உள்ளவரானால் லக்ஷ்மணனால் சொல்லப்பட்ட மந்த்ரம் பலிக்குமா? 'ராமன் தர்மாத்மாவாகவும், ஸத்யஸந்தனாகவும், யுத்தத்தில் பின்வாங்காதவனாகவும் இருக்கும் பக்ஷத்தில், ஏ பாணமே! நீ இந்த்ரஜித்தைக் கொல்' என்று அந்த மந்த்ரத்தின் பொருள். லக்ஷ்மணன் குத்ருஷ்டிகள் சொல்லவிருக்கும் இம் மூன்று தோஷங்களும் என் ராமனுக்குக் கிடையாது என்று நிலை நாட்டுவதற்காகவே, இந்த சபதத்தைச் செய்து இந்த்ரஜித்தை வதம் செய்து குத்ருஷ்டிகளையும் நிரஸனம் செய்தார். பிறகு ராமனும் லக்ஷ்மணனைப் பார்த்து, 'छिन्नो हि दक्षिणो बाहुस्स हि तस्य व्यपाश्रयः' ராவணனுக்கு வலது கையானது (வலக்கையான இந்த்ரஜித்து) உன்னால் அழிக்கப்பட்டது அது தான் அவனுக்குப் பிடிப்பு என்று ஸ்தோத்திரம் செய்கிறார். லக்ஷ்மணனும் 'रामस्य दक्षिणो बाहुः' என்றபடி ராமனுக்கு வலது கை. ராமனது வலது கை ராவணனது வலது கையை அழித்தது. மற்றும், त्वया लक्ष्मण! नाथेन सीता च पृथिवी च मे न दुष्प्रापाहते त्वद्य शक्रजेतरि चाहवे' லக்ஷ்மணா எனக்கு ரக்ஷகனாக நீ இருக்கும் பொழுது ஸீதை, இந்த பூமி எல்லாம் எனக்கு அடையமுடியாதவர்கள் அல்ல என்று ஸ்தோத்திரம் செய்கிறார். ஆகையால் தான் 'तथैव रामः ... ... लक्ष्मणबाहुपालितः' என்று ராமனை லக்ஷ்மண பாஹுபலத்தால் காப்பாற்றப்பட்ட

அழகுபடுத்துவது நமது கடமையல்லவா? அதற்கு ஸ்ரீதேசிகனைப்போல் கவிதைகள் எழுதிக் கைங்கர்யங்கள் பண்ணுவதும் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனைப்போல ஸம்ப்ரதாயக்ரந்தங்களைப்ரசாரம்பண்ணுவதும் ஸ்ரீதேசிகன் திருவடிகளான எல்லோருக்கும் ஸம்ப்ரதாயத்தில் ருசியை உண்டாக்குவதும் ஸ்ரீதேசிக க்ரந்தங்களை கற்பிக்கும் பள்ளிக்கூடங்களை உண்டாக்குவதும் இப்படி ஏற்படுத்தும் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிப்பதும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை ஏராளமாக அச்சிட்டு இலவசமாகவோ, அல்லது மிகவும் குறைந்த விலைக்கோ எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்வதும் ஒவ்வொரு ஊரிலும் ஸ்ரீதேசிகனுடைய க்ரந்தங்களையெல்லாம் சேகரித்து புஸ்தகசாலைகளை யுண்டாக்கி இந்த புஸ்தகங்களை எல்லோரும் உபயோகித்துப் பயனடையும்படிப் பண்ணுவதும் ஆக இப்படி எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கேற்ற வழியில் கொஞ்சம் கொஞ்சம் கைங்கர்யம் செய்தால் பல துளிகள் சேர்ந்து பெரிய வெள்ளமாக ஆவதுபோல் ஸம்ப்ரதாயம் மிகவும் சிறந்து விளங்கும். இதற்கு நமது இரு ஆசார்யரத்நங்களும் அருள் புரியவேண்டும்.

ராகவே கவிஸார்வபௌமரான வால்மீகி வர்ணித்தபடியே கவிதார்க்கிகஸிம்ஹமான நமது தேசிகமணியும் அதே ஆதிசேஷனின் அவதாரமான ராமாநுஜன் என்னும் லக்ஷ்மணமுனியை **'कुदृष्टिकुहनामुखे निपततः परब्रह्मणः करग्रहविचक्षणो जयति लक्ष्मणोऽयं मुनिः'** என்று அநுபவிக்கிறார். ராமாநுஜனை உள்ளபடி அறிய ராமாநுஜனால் தான் முடியும். ஸ்வாமி தேசிகனும் ஓர் ராமாநுஜன் தான். **'यतीन्द्रांशो थवेत्येवं वितर्क्यायास्तु मङ्गळम्'** (யதீந்த்ரரான உடையவரின் அம்சம் என்றும் ஊஹிக்கத் தகுந்தவர்) என்றல்லவோ ஆசார்யனின் மங்களாசாஸநம்.

தவிர ஸ்வாமி தேசிகனுக்கும் க்ருஷ்ணன் என்று ஓர் திருநாமம் உண்டு. முன் ஜன்மத்தில் க்ருஷ்ணன் என்று திருநாமமுடைய ஓர் ப்ராஹ்மணோத்தமரைத் தான் மறுபிறவியில் வேதாந்ததேசிகனாக திருவேங்கடமுடையான் அவதரிக்கச் செய்தான். இன்றைக்கும் திருமலையில் வேங்கடநாதனுக்குச் செய்யும் அர்ச்சனையில் **'कृष्णाख्यविप्रवेदान्तदेशिकत्वप्रदाय च'** என்று இந்த விருத்தாந்தத்தைத் தெரிவிக்கும்படி ஓர் நாமாவளியைத் திருவேங்கடமுடையான் ஸ்வீகரிக்கிறான். ஆகையால் தான் நம் ஸ்வாமி தேசிகனும், **'वेदान्तदेशिकपदे विनिवेश्य बालम्'** என்று தயாசதகத்தில் அநுபவிக்கிறார். ஆதிசேஷாவதாரமான லக்ஷ்மணனிடத்தில் பகவதம்சமும் பொருந்தியிருந்தது போலல்லவா க்ருஷ்ணனான நம் தேசிகமணியிடத்தில் திருமணியின் அம்சமும் பொருந்தியிருப்பது. க்ருஷ்ணனும் ஓர் ராமாநுஜன் தானே! (பலராமனுக்குத் தம்பி) ஆகையால் தான். எம்பெருமானான ராமாநுஜனையும் அவர் ஸம்ப்ரதாயத்தையும் உள்ளபடி தெரிந்து அநுபவிப்பது க்ருஷ்ணனால் தான் முடியும். ஆகையால் தான் ராமாநுஜனை அறிந்த ராமாநுஜனான நம் ஸ்வாமி தேசிகன், கீதாசார்யனான பழைய ராமாநுஜன் (க்ருஷ்ணன்) ஸாதித்த கீதையை 'சென்றால் குடையாம் இருந்தால் சிங்காதனமாம்' என்ற ரீதியில் தேர்த்தட்டில் பகவானுக்கு ஆஸனமாக இருந்து உள்ளது உள்ளபடி நேருக்கு நேர் கேட்டு அறிந்தபடியே அக்கீதைக்கு ஆதிசேஷாவதாரமான நவீன ராமாநுஜன் சரியானபாஷ்யத்தைச் செய்தருளினார். (அர்ஜுனன்) பகவானைக் காட்டிலும் உந்நதஸ்தானத்தில் இருந்து கேட்டதால் அவனுக்குப் பலிக்கவில்லை. நம் ராமாநுஜன் சிஷ்யவ்ருத்திப்படி கீழிருந்து கேட்டதால் இவருக்குப் பலித்து பாஷ்யமும் செய்தருளினார். மறுபடி ராமாநுஜபாஷ்யத்துக்கே அபிநவராமாநுஜனான நம்தூப்புல்வள்ளல்தாத்பர்யசந்த்ரிகையென்னும் விஸ்ருததமமான வ்யாக்யாநத்தை அருளிச்செய்தார். அப்படிப்பட்ட நம் தூப்புல் குலமணியான ராமாநுஜனும், தம் மாதுலரான ஆத்ரேய ராமாநுஜனிடத்தில் அல்லவா ஸகல கலைகளையும் கற்றறிந்தது. **'रामानुजार्यादात्रेयान्मातुलात्सकलाः कलाः । अवाप विंशत्यब्दे यः'** என்றல்லவோ தேசிகனின் பெருமை பேசப்படுவது. ஆகையால் ராமாநுஜனின் மஹிமையை அறிந்தவர் அபிநவராமாநுஜனான நம் தூப்புல் குலமணியே. இப்படிப்பட்ட ராமாநுஜனின் மஹிமையை அறிய நம் சிற்றறிவுக்கு சக்தி ஏது?

☞ விஷயதானம் செய்பவர்களுக்கு ஓர் விஜ்ஞாபனம்

'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' விற்கு விஷயதானம் செய்ய விரும்புபவர்கள் அதிக விஸ்தாரமில்லாமலும், பாமரர்களுக்கும் எளிதில் விளங்கும்படியும், வீண் விவாதங்களுக்கு இடமில்லாமலும் இருக்கும் வியாஸங்களை அனுப்பினால் அவை யதாவகாசம் வெளியிடப்படும்.

வியாஸங்களை காகிதத்தில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுவதுடன், கையெழுத்து புரியும்படி இங்கியினால் எழுதப்பட வேண்டும். ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்கும்படி லேகங்கள் எழுதப்படவேண்டும்.

செய்திக்குறிப்புகளை ப்ரசுரிக்க விரும்புபவர்கள் காட்கடந்த செய்திகளை அனுப்பாமலும் கூடியவரை ஸங்க்ரஹித்தும் அனுப்பினால் க்ரமேண ப்ரசுரம் செய்ய ஸௌகர்யமாயிருக்கும்.

ப்ரசுரம் செய்யப்படாத வியாஸங்களைத் திரும்ப அபேக்ஷிப்பவர்கள் போதிய தபால்தலைகளை அனுப்பினால் திருப்பியனுப்பப்படும். பத்திரிகையில் உள்ள அவகாசத்தை அநுஸரித்து ஏற்படும் அநிவார்யமான விளம்பத்தையும் பொருத்துக்கொள்ளுமாறு கோரப்படுகிறது.

ஸ்ரீ.

கோதையின் கட்டளையும் மேகத்தின் முழவொலியும்

கோவிந்தனைக்கூடி யின்புறவேண்டி அந்தப் பரமன் நினைவாகவே இருந்து அவன் வருகின்ற வழியின்மேல் தன் விழியைச் செலுத்தி ஏங்குகிருள் கோதை பிராட்டி. வந்தது கார்காலம். மிகவும் கலங்குகிருள். சோலையிலே உட்கார்ந்து உலகமளந்த உத்தமன் நினைவாக உருகி ஏங்குகின்ற கோதை தன் தனிமையையும் நிலைமையையும் அந்தப் பரமனுக்கு உரைப்பார் யார்? என்று மனச் சோர்வு அடைகிருள். திடீரென்று அவளுடைய சிந்தனை கலையும்படி சில மின்வெட்டுக்களும் அதிர்கின்ற முழுவொலிபோன்ற கர்ஜனைகளும் தோன்றுகின்றன. மேலே பார்க்கிருள் கோதை. வானவெளியில் சிறிதும் வெற்றிடம் இல்லாதபடி வியாபித்து நிற்கின்றன மேகக் கூட்டங்கள்.

சிறிது கவனித்துப் பார்த்தாள். அக்கூட்டங்கள் நிற்பதாகத் தெரியவில்லை. வடக்கு நோக்கிச் சென்றுகொண்டேதான் இருக்கின்றன. செல்லுகின்ற மேகம் சென்றாலும் அது விட்டுச் சென்ற இடம் காலியாக இல்லை. மேலும் மேலும் அடுக்கடுக்காகக் கரிய நிறத்தோடும் கொடிமின்னலும் சுழிமின்னலும் கண்ணைப்பறிக்க, மிகுந்த சப்தங்களோடும் எழுந்தெழுந்து அடர்ந்து பரந்து சென்றுகொண்டேயிருக்கின்றன.

தயாசீலனான பரமனுடைய நிர்ஹேதுகமான க்ருபையை நமக்கு நியாபகப்படுத்துவதுடன் அவனுடைய திருமேனி ஒளியையும் தான் தவம் செய்து பெற்ற இந்த மேகங்கள் கருவிலே திருவுடையவைகள். வானவெளி முழுதும் பரந்து வியாபித்திருக்கின்றனவே வானம் மட்டுமா இவைகளுக்குரியது? அழியாத ஐச்வர்யமானவனும், பாபங்களை எரிப்பவனுமாகிய ஸர்வேச்வரன் திருமேனிபோன்ற நிறமும், அவன் மார்பில் அமர்ந்த திருமகள் போன்ற கொடி மின்னலும், அவனது குருக்கைகளிலமர்ந்த திருவாழியாழ்வான் போன்ற சுழிமின்னலும் ஸ்ரீபாஞ்ச சன்னியாழ்வான் போன்ற அதிர முழக்கமும் கொண்டு, ஆதலினால் பெறுதற்கரிய பெருமைகொண்டவையன்றோ இவைகள்? அந்தப் பெருமையும் தன் மிடுக்கும் தோன்ற களித்து மதர்த்து அதிர்ந்தெழும் கருவிலே திருவுடையவையன்றோ இவைகள்? அழகிய மிகப் பெரிய உலகங்களின் செல்வமல்லவோ இவைகள். பரம புருஷனுடைய திருமேனி போன்ற உருவமுள்ள இவைகள் அவனைப் போன்ற உபகாரியாகவும் இருப்பதனால் அவனைப் போன்ற இரக்கமுள்ளவையாகவும் இருக்குமன்றோ? இவைகளிடம் நம் நிலையைச் சொல்லி உதவி கேட்போம். இவைகள் நம்மிடம் இரங்கி உதவி செய்யலாம் என்று நினைத்து அந்த மேகங்களைக் கோதை கூவியழைக்கிருள். ''வான்கொண்டு கிளர்ந்தெழுந்தமாமுகில்காள்'' என்று அந்தமேகங்கள் தங்கள் இயற்கைப்படி முழங்குகின்றன. அந்த இடிமுழக்கம் கோதையின் காதுகளுக்குத் தன் கூப்பாட்டுக்கு அவை பதிலுரைக்கும் தொனியாகவே தோன்றுகிறது. அந்த மேகங்கள் ஒருவேளை தாங்கள் திருவேங்கடத்துக்குப் போவதாகக் கூறினவோ என்னவோ. மறுபடியும் கோதை அவைகளைக் கூவியழைக்கும் வடிவத்திலே ஓர் கட்டளையும் இடுகிருள், அவைகளுக்கு. அதாவது அத்திருவேங்கடத்தில் பூத்துக் குலுங்கும் தேன் நிறைந்த மலர்கள் சிதரி உதிரும்படி நீங்கள் பொழிய வேண்டும் என்றும், அத் திருவேங்கடத்து மலர்கள் சிதரி உதிரும்படி பொழியுமவர்களே நீங்கள் திரண்டு எழுந்து அதிரும்போதே அந்தத் தேன் நிறைந்த மலர்கள் உதிர வேண்டும் என்றும், பொருள்கள் பலவாகத் தோன்றும்படி அழைக்கிருள். வேங்கடத்துத் தேன்கொண்ட மலர் சிதறத் திரண்டேறிப் பொழிவீர்காள்'' என்று. மறுபடியும் அந்தமேகங்கள் அதிர்ந்து முழங்குகின்றன. ஆனால் மற்றையோருக்கு

வெற்று முழக்கமாகத் தோன்றுகிற, அந்த ஒலி கோதையின் காதுகளில் கேள்வியாக ஒலிக்கின்றன. வேங்கடத்திலுள்ள தேன் நிறைந்த மலர் சிதறும்படி நாங்கள் ஏன் அதிரவேண்டும்? நாங்கள் ஏன் பொழியவேண்டும்? என்பதுபோல் தோன்றுகிறது அந்த முழக்கம். அதற்குக் கோதை பதில் உரைக்கிறாள். நீங்கள் செய்யும் காரியம் உங்கள் இயற்கையேயாகும். ஆனால் அது அந்தப் பரம புருஷனுக்கு அவனுடைய கருணையும் பக்த ரக்ஷண சிந்தையையும் நினைவுபடுத்த வேண்டும். ஓர் அசுர குலத்துச் சிறுவனுக்காகத் தான்செய்த காரியங்களை அவன் நினைத்துக் கொள்ளவேண்டும். பக்தனானால் தானென்ன? அவனுக்காக அந்தப் பரமன் பட்டபாடு எவ்வளவு! அப்பப்ப!! மனிதனும் இல்லாமல் மிருகமும் இல்லாமல் ஓர் உருவம். அதுவும் ஓர் இடத்திலா, இரண்டிடத்திலா? அண்ட சராசரமனைத்திலுள்ளும் அணுதோறும் அந்த நரசிங்க வடிவத்துடனே உறைந்தான். பரமபக்தனைக் காக்கப் பரமத்வேஷியையும் கையினால் தொட்டு ஸம்ஹரித்தான். அந்த விஷயங்களை அவன் நினைவுகொள்ள வேண்டும். அத்துடன் இப்படி ஓர் பெண் கொடியை வருத்துதல் தன்னுடைய இயல்புக்குப் பொருந்துமா என்பதையும் உணர வேண்டும். சத்ருவின் உடலையல்லவா பிளக்க வேண்டும்? தன்னையே நினைத்துருகும் தன் அடியாருக்கும் அப்படிப்பட்ட ஹிம்சை செய்யலாமா? அதாவது உடலைப் பிளப்பதற்குச் சமமான உபத்திரவம் கொடுத்தல் நியாயமா? என்பதையும் அவர் உணரவேண்டும். ஆகையால் பொழிமின் என்ற பொருள்கள் தோன்றும்படி “ஊன்கொண்ட வள்ளுகிரால் இரணியனை உடலிடந்தான்” என்கிறாள். மேகங்கள் மேலும் அதிர்கின்றன. அவன் நிலைமையை அவனுக்கு ஞாபகப்படுத்தினால் அதனால் உனக்கென்ன லாபம்? உன் நினைவு அவனுக்கு எப்படி வரும்? என்று கேட்பது போலிருக்கிறது அந்த முழக்கம். அதற்கும் பதில் கூறுகிறாள் கோதை. ‘நீங்கள் அங்கே திரண்டெழுந்து சென்று அதிர்ந்து ஏறும்போதே கார்காலம் வந்ததை அவன் தெரிந்துகொள்ளக் கூடும். ஜகத்ரக்ஷணதிவ்யாபாரசிந்தையிலே என்னைச் சற்று மறந்திருந்தாலும், இயல்பாக அவனுக்குள்ள கருணை போய்விடுமா? உங்களுடைய பொழிதலைக் கண்டவுடன் தன்னிலைமை நன்றாக நினைவுக்கு வரும் ‘இயல்பான பரம கருணையுள்ளவன், என்றல்லவோ நம்மைச் சொல்லுகிறார்கள்? இப்போது நம் கருணை என்னவாயிற்று? கார்காலம் வந்தும் கோதையைப் பிரிந்திருக்கிறோமே’ என்றிப்படி பல பலவாக நினைவுகள் வரும். தேன்கொண்ட மலர்கள் சிதறும்போது என் நினைவு இன்னும் அதிகம் வரும். ‘ஆஹா! இம் மலர்கள் இப்படிச் சிந்தி வீணாகின்றனவே? இவைகளைக் கோதை தன் குழலிலே சூட்டி நமக்கு அளித்தால் எவ்வளவு ஆனந்தமா யிருக்கும்?’ என்று நினைப்பான் அந்த நிர்மலன். அப்போது அவன் மனநிலை உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவ் வேளையில் நீங்கள் எனக்காக அவனிடம் பேசுங்கள்’ என்கிறாள் ஆண்டாள். அப்போது அவைகள் முழக்கின இடி முழக்கம் ‘உங்களுக்காக என்ன பேசுவது நாங்கள்’ என்று கேட்பது போல் ஒலிக்கிறது. அதற்குக்கோதை அவைகளிடம் சொல்லுகிறாள்-: ‘அந்த எம்பெருமானுடைய பிரிவினால் என் உடல் மெலிகிறது. என் கைகளிலுள்ள வளைகள் சரிந்து விழுகின்றன. அவன் பிரியாது என்னோடு கூடியிருந்தால் வளை சரியாது. ஆதலின் அவனிடம் நீங்கள் ‘கோதையின் வளையல்களைப் பிடுங்கிக் கொண்டு வந்து விட்டீர்களே, இது நியாயமா? அந்த அபலையின் வளையல்களைப் பிடுங்கலாமா? உமது கையிலுள்ள சங்கமே உமக்குப் பல தடவைகளில் தேவைப்படுவதில்லையே? இரணியஸம்ஹாரத்தில் உமக்கு எந்த ஆயுதம் உதவிற்று? மாமிசங்கொண்ட, கூர்மையான நகங்களன்றோ உதவின? அவளுடைய சங்குவளை முதலிய வளையல்களைக் கொடுத்து விடுங்கள்’ என்று சொல்லுங்கள். நீங்கள் பேசும்போது அவனது சிந்தனை மாறாதிருக்க வேண்டும். அவன் இரங்குவான் போல் தோன்றினால் சொல்லுங்கள்’ என்று பேசுகிறாள் பெண்ணின்

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

கார்த்திகை 29௳ பெரிய திருமஞ்சனம் நடந்தது. மார்கழி 1௳ கைசிகதுவாதசியன்று மத்யானம் பெருமாள்ஸந்நிதியில் கைசிக புராணம் ஸ்ரீ அழகியசிங்காால் ஸேவிக்கப் பட்டு அர்த்தமும் ஸாதிக்கப்பட்டது. அன்று தனுர்மாஸ ஆராதனமும் நடந்தது. அன்று முதலே அநேகமாக எல்லா நாட்க்ளும் டோலோத்ஸவம் நடந்து வருகிறது. பம்பாய் வாசிகள் வேதாந்ததேசிக சபையின் சார்பில் அநேகர்களைக் கொண்டு ஆராதித்து வருவதுடன் ஒரு நாள் திருமஞ்சனம், ததீயாராதனம் டோலை வரையில் முழுவதும் ஆராதிக்க ஆசைப்பட்டவர்களுக்கும் அவரவர்களுக்கு இடங்கொடுத்து ஆராதித்து வருகிறார்கள். மார்கழி 1௳ புறப்பட்டு 6 மைல் தூரமுள்ள கல்கத்தா பஸ்கட்கு சொந்தமான மோஹினிமஹாலுக்கு எழுந்தருளப்பண்ணி கதாதர சோமானி என்பவர் ஆருதித்து டோலை நடத்திவைத்தார்.

இந்த தேச வழக்கப்படி ஸ்ரீ அழகிய சிங்கர் பாதபூஜை பண்ணவேண்டு மென்று கதாதர சோமானியும் அவர் தகப்பனாரும் மற்றும்அவர்களைச் சேர்ந்தவர்களும் ரொம்பவும் பிரார்த்தித்தார்கள். அதன்பேரில் அது அந்த தேசத்து வழக்கமில்லை யென்றும் அதற்குபதிலாக பாதுகையை பூஜிக்கலா மென்றும் இது ஒரு புராண பிரசித்தமான வழி யென்றும் ஸாதித்ததின் பேரில் அவர்கள் அப்படியே சென்று அழகிய சிங்கர் பாதுகையைப் பெற்று அதற்கு அபிஷேகங்கள்பண்ணி சமக்ரமாக ஆராதனம் செய்து விசேஷ சம்பாவனையும் செய்து அந்த தீர்த்த ப்ரஸாதங்கள் கோஷ்டிவிநியோகம் செய்தார்கள். அப்பொழுது ஹிந்தியில் மதுராந்தகம் ஸ்ரீ ரங்கநாதாசாரியர் சிரோமணி, பெருமாளுடையவும், ஸ்ரீமடத்தினுடையவும் ஸ்ரீ அழகியசிங்கருடையவும் பிரபாவத்தை எடுத்துச் சொன்னார். அன்று ராத்திரி புறப்பட்டு மறுபடியு ம்ஸையானுக்கு எழுந்தருளியாயிற்று. எல்லோரும் பெரிய திருமஞ்சனத்தையே செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு அதை பகலில் காலை 10 மணி ஸுமாருக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள். தனுர்மாஸமான படியால் உதயத்திற்குள் தனுர்மாஸ ஆராதனம் பூர்த்தியாகி ஸ்ரீ அழகியசிங்கர் அனுஷ்டானத்திற்கு எழுந்தருளி, அனுஷ்டானம் ஆன பிறகு, மற்ற நாளில் விச்வரூபகாலத்தில் எழுந்தருளி ஸங்க்ரஹமாக அபிகமனத்தையும் திருவாராதனத்தையும் செய்து, பிறகு மங்களஹாரத்தியாகி, திருப்பாவை சாற்றுமுறை நாள்பாட்டு, ஆண்டாள் வாழித்திருநாமங்கள் நடந்து தீர்த்தவிநியோகம், கோஷ்டி, கோதாஸ்துதி அனுஸந்தானம் நடந்து வருகிற வழக்க

பேராசியாகிய கோதை, அப்பொழுதும் அம் மேகங்கள் இடிக்கின்றன. அவன் இரங்குவான் போல் தோன்றினால் தானே நாங்கள் சொல்ல வேண்டும். அந்த எம்பெருமான் இரக்கம் காட்டுவான் என்று தோன்றுவிட்டால் என்று கேட்பது போலிருக்கிறது. 'அவர் நிச்சயமாகத் தருவார். நீங்கள் பேசவேண்டியதை அறிந்து பேசுங்கள். நீங்கள் உரிய தன்மையுடன், உயரிய தன்மையுடன் நன்றாகப்பேசுங்கள்' என்று கூறும் குழற்கோதையின் திருவாக்கு 'தான் கோண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே, என்று பேசுகிறது. இனி மேற்படி பாசுரம் முழுமையும் காண்க:—

'வான்கோண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்!
வேங்கடத்துத்
தேன்கோண்ட மலர்சிதறத் திரண்டேறிப்
பொழிவீர்காள்
ஊன்கோண்ட வள்ளுகிரால் இரணியனை உட
லிடந்தான்
தான்கோண்ட சரிவளைகள் தருமாகில் சாற்று
மினே.'

மாதலால், பிறகு திருமஞ்சனம் பண்ணுவது ஸௌகர்யமில்லையென்றும், மார்கழிமாதத்தில் ஸ்வாதி முதலியதுகள் கூட தனுர்மாஸ ஆராதனத்தில்தான் திருமஞ்சனம் நடக்குமென்றும், அதுதான் ஆண்டாளுடன் பெருமாளுக்கு மார்கழி நீராட்டமென்றும் (மார்கழி மாதம் முடிய ஆண்டாளுக்குத் திருமஞ்சனம் நடக்குமாதலால்) அப்படித்தான் நடக்கவேண்டுமென்றும், அதைஸேவிக்க நீங்கள்ஸித்தமாக வரவேண்டுமென்றும் ஸாதிக்கும்படியிருந்தது. அந்த மாதிரி பெரிய திருமஞ்சனம் நடக்கும் நாளில் மணி 4- லிருந்து 4-30 க்குள் விச்வரூபமாகி தனுர்மாஸ ஆராதனம் ஆரம்பிக்கப்பட்டு 5-30 லிருந்து 6 க்குள் பால், தயிர் முதலிய திருமஞ்சனங்களாகி, பிறகு ஏகாந்த திருமஞ்சனம் நடந்து, 6-30 அல்லது 7 க்குள் அலங்கார திருமஞ்சனம் (ஸ்நபனம், சங்கதாரை; பத்மதாரை, ஸஹஸ்ரதாரைகளுடன் திருமஞ்சனம் ஆகி, 8-30 லிருந்து 9 க்குள் திருப்பாவை சாற்றுமுறை கோஷ்டி விநியோகம் நடந்து வருகிறது. திருமஞ்சனம் இல்லாத நாட்களில் 4-30 லிருந்து 5 மணிக்கு விச்வரூபமும், ஆராதனமும் ஆரம்பிக்கப்பட்டு 7 லிருந்து 7-30 க்குள் திருப்பாவை சாற்றுமுறை நடந்து வருகிறது.

அந்தப்படி மார்கழி 7, 9, 13, 16, 18, 20, 22 தேதிகளில் திருமஞ்சனங்கள் அவரவர்கள் உபயமாகவும் செய்து வைத்தார்கள். டோலை காலத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஏதாவது ஹிதோபதேசம் செய்யவேண்டுமென்று மிகவும் நிர்ப்பந்தித்துப் பிரார்த்தித்ததின் பேரில், ஐந்து டோலோத்ஸவங்களில் முக்யமாக ஸதாசாரத்தை விஷயமாக வைத்து, அதற்கு உபபாதகமாக அநேக வைதிக லௌகிக விருத்தாந்தங்களையும் எடுத்து எல்லோர் மனதில் படும்படி ஸாதித்தாயிற்று. அதைக் கேட்டுவிட்டுச் சிறுவர் முதல் பெரியவர்கள் வரையில் தக்ஷிண தேசத்தைக் காட்டிலும் இங்கு வந்திருக்கும் தக்ஷிணபாரதத்தவர்களே கிராப்பை ஒழித்துக்கொண்டு சிகை வைத்துக்கொண்டு வருகிறார்கள். மார்கழி 3௳ 16-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரமும், 12௳ 4-ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரமும், 14௳ 30-வது பட்டம், 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்கள் திருநஹத்ரங்களும் ஸேவை சாற்றுமறைகளும் நடந்தது. மார்கழி 15௳ 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரத்தை உத்தேசித்து வேத, கிரந்த பாராயண, தேசிகப்ரபந்தஸேவைகள் ஆரம்பிக்கப்பட்டது. மார்கழி 16, 18, 20, 22 தேதிகளில் பெரியதிருமஞ்சனம் நடந்தது. 24௳ 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரமும் சாத்துமுறையும் நடந்து ஸ்ரீபாததீர்த்தமும் கோஷ்டியுடன் நன்றாக நடந்தது.

மார்கழி ௴ 26௳ பெரிய பெருமாள் திருமஞ்சனமும் 27௴ பெரிய திரிமஞ்சனமும் நடந்தது. நித்யம் டோலோத்ஸவம் நடந்து கொண்டு வருகிறது. கார்த்திகை௴ 22௳ ஆரம்பித்து நடந்துவரும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயசாரம்- இந்த மாதத்தில் அர்த்தானுசாஸன பாகம் பூர்த்தியாகப்போகிறது. ஸ்ரீபாஷ்யம் 2-வது அத்யாயம் பூர்த்தியாகப் போகிறது.

இப்போது செய்து வரப்பட்டிருக்கும் தங்க திருமஞ்சனத் தட்டிற்கு அநுகுணமான தங்கத்திலேயே சங்கதாரை பத்மதாரை பண்ணவேண்டுமென திருவுள்ளம்பற்றியாயிற்று. அதுவிஷயமாக ஒரு வாரத்திற்குமுன் வேலைக்காரர்களை விசாரிக்க நியமனமாகியிருந்தது. அதுவிஷயமாக விசாரித்து மார்கழி௴ 26௳ முடிவு ஏற்பட்டு அன்று அதை செய்யும்படி நியமனமாயிற்று. அன்று தினம் மாலே மணிவண்ணா பாசுரமானபடியால் பெருமாளுக்கு இந்த பம்பாயில் மார்கழி மாமத்தில் அடிக்கடி திருமஞ்சனம் நடந்துவருவதால் மார்கழி நீராடுவானுக்கு வேண்டியன பாஞ்சஜன்யமே போல்வன, சங்கம் பத்மதாரை பெருமாள் திருவுள்ளம் உகந்து நியமிக்கிறார்போல் இருக்கிறது. அதனால்தான் இவ்வளவு நாள் தள்ளி இன்று வேலைக்காரர்கள் ஒத்துக் கொண்டுபோனார்கள் என்று ஸாதிக்கும்படியாயிருந்தது. பம்பாயிலேயே திருமஞ்சனத்திற்கு உபயோகப்படும்படி தருவதாக ஒத்துக்கொண்டு போயிருக்கிறார்கள்.

ஸ்ரீ:

தை உத்திராடம்

தை பிறந்தால் வழி பிறக்குமெனப் பறை சாற்றுகின்றனர் பண்டிதர்களும்பாமரர்களும். உத்திராடத்தில் ஓர் புதல்வனும் ஊர் ஓரத்தில் ஓர் காணியும் இருந்தால் அவர்களுக்கு யாதொரு குறையுமில்லை எனவும் உரைக்கின்றனர் உத்தமர். இவ்விரண்டு பழமொழிகளும் அமைந்ததின் அழகே தனி. 'மாஸாநாம் மார்க்கசீர்ஷோZஹம்' என்பதாக அல்லவோ கூறியுள்ளான் கீதாசாரியன். மாதங்களுக்குள் மார்கழியாகிறேன் என்பது இதன் உரை. ஆதலால் மார்கழி மாதத்திற்கு ஓர் சிறப்பு ஏற்பட்டிருக்கின்றதல்லவா? அண்டை வீட்டினரின் உயர்வை விரும்பாமைதானே உலகின் இயல்பு. அவ்வாறே மார்கழியின் சிறப்பைக்கண்டும் பொறுமையையும் அருவருப்பையும் ஒருங்கே கொண்டு தை மாதம் தனக்குள் பலவாறு எண்ணியது. உபநயனம் விவாஹம் முதலிய நற்காரியங்களுக்கு முற்றும் புறம்பான மார்கழி மாதத்திற்கு என்ன சிறப்பு? என்னே அநியாயம்? ஆம், பிறவிக் குருடனுக்குப் புண்டரீகாக்ஷன் எனப் பெயரிடுவதும்; பார்க்க ஸகியாத பாவையை சுந்தரி என அழைப்பதும், ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களில் அழித்தலையே அடிப்படையாகக் கொண்ட தெய்வத்தைச் சங்கரன் (க்ஷேமத்தை அளிப்பவன்) எனப் புகழ்தலும் இவ்வுலகின் இயற்கையே. அதே உலகு மன்மதனை உருவெடுத்தாற்போலே தோன்றிய மானிடனை மண்ணாங்கட்டி எனவும் அழைக்கிறது. என்னே காலத்தின் கோலம்? நற்காரியங்களை செய்பவர்க்கு உதவியாக இருப்பினும் என்னை எவரும் விரும்பவில்லை. நியாயமே; என நினைத்திருக்கையில் அழுகின்ற குழந்தைக்கு வாழைப்பழமளிப்பதுபோல் "தை பிறந்தால் வழி பிறக்கும்'' என உன்னையும் சான்றோர் புகழ்வர் என அசரீரி வாக்கு ஒலித்தது. இது தான் இப்பழமொழி வந்தவழி என வைத்துக் கொள்வோம்.

இப்பழமொழி வந்ததன் காரணத்தை வேறு விதமாகவும் நினைக்கக் காரண மிருக்கிறது. இப்பழமொழியை ஸார்த்தகமாக்கவே (மெய்ப்பிக்கவே) ஓர் உத்தமர் மாபெறும் அவனியில் அவதரித்தார். அவரை அறியாதார் யாருமில்லை. அவர்தான் ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தானத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராக யெழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன். இவ்வழகிய சிங்கர் தைமாத உத்திராட நக்ஷத்திரத்திலன்றோ அவதரித்தார். ஆதலால் சிஷ்யகோடிகளும் பக்தஜனங்களும் தை மாதம் எப்பொழுது பிறக்கும் எனவும் உத்திராட நக்ஷத்திரம் என்றுதான் வரும்? எனவும் எதிர்பார்த்து ஏங்கிக் கிடக்கின்றனர். அன்று ஸ்ரீ அழகிய சிங்கரின் அவதார தினமாகையால் அனைவரும் ஒன்றுகூடி ஸ்ரீமதழகியசிங்கரின் பெருமைகளை வாயினால் பாடி, மனத்தினால் சிந்தித்துப் பெரும் புண்ணியமெய்தி நல்வழியை பெற முயற்சிக்க வேண்டியது கடமை தானே. மேலும் "ஆசார்ய தேவோ பவ'' என்னும் வாக்கியத்தைக் கொண்டும் ஆசார்யர்களைத் தெய்வங்களாகக் கொண்டாடவேண்டுமென்றும் ஆசார்யனை வழிபடாதொருவன் கடைத்தேறமாட்டான் எனவும் பெரியோர்கள் பகர்கின்றார்கள். ஆதலின் நாம் நற்கதியை அடையவும், ஆசார்யனின் அவதார தினத்தைக் கொண்டாடவும் தை மாதம் தானே பிறக்க வேண்டும், ஆக தை பிறந்தால்தான் அனைவருக்கும் நல்வழி பிறக்குமென இப்பழமொழிக்குப் பொருள் கூறின் யாது தவறு?

இனி உத்திராடத்தில் ஓர் புதல்வனும் ஊர் ஓரத்தில் ஓர் காணியும்'' என்னும் பழமொழியைப் பராமர்சிப்போம். "மகன் தந்தைக் காற்றுமுதவி இவன்றந்தை என்னோற்றான்கொல் என்னுஞ்சொல்'' என்னும் குறளுக்கிசைய சிறந்த கல்வியால் நிறைந்த

உள்ளம் படைத்தவரும், உண்மை பேசல், கீர்த்தி இவைகளால் உலகத்தை வெண்மையாகச் செய்தவரும் ‹‹பரித்ராணாய ஸாதூனாம் விநாஶாய ச துஷ்க்ருதாம் । தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.'' என்னும் கீதாசாரியனான கிருஷ்ணனது பேருபதேசத்திற்கிணங்க வடதேசங்களில் நமது ஸமயத்தைத் தழைத்தோங்கச் செய்ய ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் க்ஷீணிக்கும் ஸமயம் அங்கு விரைந்து சென்று நமது ஸித்தாந்தத்தை நிலைநிறுத்தியவருமான நம் ஸ்ரீ அழகிய சிங்கரை நமக்கு அருளியவர்கள் பெரும்புண்ணியசாலிகளன்றோ? ஸ்ரீ அழகியசிங்கரை ஈன்றவர்கள் நோற்ற நோன்புதான் என்னே? ஆக உத்திராடத்தில் ஓர் புதல்வனும்......'' என்ற பழமொழியையும் மெய்ப்பித்தவர் நம் ஸ்ரீமதழகியசிங்கரே என்பதை எவ்வாறு மறக்க இயலும்?

நிற்க, புரட்டாசித் திருவோணம் என்றால் தூப்பல் வள்ளலின் நினைவு வருவதுபோலும் புனர்வஸு என்றதும் ஸ்ரீராம பிரானின் நினைவு தோன்றுவதுபோலும், தை உத்திராடம் எனக் கேட்டதும் ஸ்ரீ அழகிய சிங்கரின் ஞாபகம் வருவது இயற்கையே. அப்படியிருக்க அவ்வழகிய சிங்கரின் குணங்களைப் பற்றியும் சிறிது எழுதவேண்டியது கடமையல்லவா?

இவ்வழகிய சிங்கரின் தனியனைச் சேவித்தாலே இன்பவெள்ளம் நம்மைத் திணற அடித்து விடுகிறது. 'தாந்திக்ஷாந்திதயாதிபி:' என்பது தனியனின் உத்தரார்த்தம். சாந்தி, தானம், பொறுமை தயை முதலிய நற்குணங்களால் பிரகாசிப்பவரும், வித்வத்சிகாமணிகளின் முன்னே செல்பவரும், நன்மைகளின் இருப்பிடமானவருமான ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோபயதீந்த்ரமஹாதேசிகனை அடைகிறேன் என்பது இதன் கருத்து.

நற்குணங்கள் பல இருப்பினும் அவற்றுள் தானம் என்ற குணம்தான் மிகச்சிறந்து விளங்குகிறது, ஆகவே சிறந்த குணமாகக் கருதப்படும் தானம் என்பது நமது அழகிய சிங்கரிடம் குடிகொண்டிருக்கும் மேன்மைதான் என்னே? பாந்தம் என்னும் பதத்திற்கு ப்ரகாசிப்பவர் என்பது பொருள். சூரியன் பிரகாசிக்கிறானென்றால் கதிர்களின் உதவியைகொண்டுதானே? அவ்வாறு நம் ஸ்ரீ அழகியசிங்கரும் தயை, தானம், பொருமை, எந்நாளுமெழில் குறையாத யசஸ் முதலியவைகளால் ப்ரகாசிக்கிறார். மேலும் சுபகுணை: என்றதால் நம் ஸ்வாமியிடம் குடிகொண்டுள்ளவை யாவும் நற்குணங்களேயல்லாது வேறு எவையுமில்லை என்பதும் நன்கு விளங்குகின்றது.

பண்டிதர்களின் முன்னே செல்லுந்திறனுள்ளவர் என்னுங் கருத்தை ''புதாக்ரேஸர'மென்னும் பதம் தெளிவுறுத்துகிறது. முற்காலத்தில் மன்னர்கள் சண்டையிட நான்கு படைகளையும் உபயோகித்து வந்தனர். அவற்றுள் யானைப் படையும் ஒன்று. அப்படையில் சிறந்ததொரு கரியை நன்கலங்கரித்து நெற்றியில் பட்டயங்கட்டி முன்னே செலுத்திப் பின்னரே மற்ற கரிகளையுஞ் செலுத்துவது வழக்கம். அக்கரி கம்பீரமாகவே நடந்துசெல்லும். அவ்வாறே பண்டிதர்களும் முன் செல்பவர் என்றதால் இவரைத்தவிர சிறந்த பண்டிதர்கள் வேறு எவருமில்லை என்பதுவும், கம்பீரபார்வையை உடையவர் என்பதும் நன்கு புலனாகிறது.

மேலும், ஸம்ஸ்க்ருத உலகில் அழியாப் புகழை அடைய விரும்பும் ஆடவன், அழகிய சிங்கரின் குணங்களையும், அவதாரவைபவத்தையும் அனுசரிக்கவேண்டுவது முக்கிய கடமையாதலால், அவைகளை தெளிவுற விளக்கும் வைபவஸுதா (ஸுதா—அம்ருதம்) வைப் பருகவேண்டும். அதுவும் வடமொழியில் இருப்பதால் அதை அறிய ஸம்ஸ்க்ருத பாடசாலைக்குச் சென்று கல்வி கற்கவேண்டும். ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸம்ஸ்க்ருதத்தில் நல்ல தேர்ச்சிபெறவேண்டுவதற்கும் சிஷ்டர்களாகத் திகழவேண்டுமென்றுந் திருவுள்ளங்கொண்டு ஸ்ரீமதுராந்தகத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் மிகப் பெரியதொரு கலாசாலையை ஏற்படுத்தியிருப்பதாலல்லவா நமக்கெல்லாம் நல்வழி பிறந்தது.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ வில்லிபுத்தூர்

நாளது கார்த்திகைமீ 20உ ஸ்ரீ அழகிய சிங்கர் திருநக்ஷத்ரம் வெகுவிமரிசையாகக்கொண்டாடப்பட்டது. சாற்றுமுறை ஸம்பாவனை தீர்த்தவிநியோகம் ஆகி சித்ரான்னங்களுடன் ததியாராதனமும்நடந்தது. ஸ்ரீ. வி. சக்ரவர்த்தி ஐயங்காரும், அட்வொகேட் வி. எஸ். கிருஷ்ணஸாமிஐயங்காருமாக நடத்திவைத்தார்கள்.

மறுநாள் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் திருநக்ஷத்திர உத்ஸவத்தை வத்திராயிருப்பு செல்லம்மாள் நடத்திவைத்தாள்.

ஸ்ரீ அஹோபிலமடம்ஆராதகர் ஸ்ரீ. உப. வே சேஷய்யங்காரால் மஹாபாரதம் உத்யோகபர்வமும் ஸ்ரீபகவத்கீதோபந்யாஸமும் மூன்றுமாதமாகநடத்தப்பட்டு மார்கழிமீ 13ம் தேதி ஸ்வாதி திருநக்ஷத்திரத்தன்று ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹன் திருநக்ஷத்ரம் கண்டருளிய பிறகு இனிது முடிவடைந்தது. வத்திராயிரப்பு செல்லம்மாள், அவரது ஸஹோதரர் ஸ்ரீ. எஸ். வி. கிருஷ்ணய்யங்காரானும் மற்றும்பலாரனும் உபந்யாஸகர்விசேஷமாக ஸந்மானிக்கப் பட்டார்.

ஸ்ரீ. உப. வே. அரையர் வடபத்ரசாயிஐயங்கார் உபந்யாஸகரைப்பாராட்டி அழகாக உபந்யஸித்தார். சந்தணம் தாம்பூலம்விநியோகிக்கப்பட்டு பிறகு உபயகலையாரும் வாத்யகோஷத்துடன் ஸ்ரீ. உப. வே. சேஷய்யங்கார்திருமாளிகைக்கும்வந்து பழம் தாம்பூலாதிகள் பெற்றுக்கொண்டு ஸம்ப்ரமமாக முடிவுபெற்றது.

ராத்ரி பெருமாளுக்கு விசேஷடோலோத்ஸவம் வத்திராயிருப்பு செல்லம்மாளால் நடத்திவைக்கப்பட்டது.

எஸ். சக்ரவர்த்திதாஸன். கௌரவஏஜண்டு.

பாதூர்

நாளது கார்த்திகைமீ 20-ம்தேதி (5-12-56) புதன்கிழமை ஸ்ரீமதஹோபிலமடம் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தாராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் திருநக்ஷத்திர மஹோத்ஸவம் வெகு விமரிசையாக ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலையில் பெற்றோர்களால் நடத்தப்பட்டது. ஆசிரியர்கள் பெற்றோர்கள் எல்லோரும் மாலை 2 மணிக்கு பாடசாலை பிள்ளைகளுடன் ஸ்ரீ அழகியசிங்கரின் படத்தை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸ்ரீதேசிகன் ஸ்தோத்ரபாடங்களை ஸேவித்து நான்கு திருவீதிகளை பிரதக்ஷணமாக மேளவாத்யத்துடன் ஊர்வலம் வந்து பள்ளிக்கூடத்தில் கூடினார்கள். இக்கொண்டாட்டத்திற்கு ஸ்ரீ. உ. வே. சௌந்திரராஜ ஐயங்கார் அக்ராஸனம் வகித்தார். அக்ராஸனர் தன் முகவுரையில் சென்ற வருஷம் நம் ஊரில் ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளி திருநக்ஷத்திரம் வெகு கோலாஹலமாக நடந்தது நம்மெல்லோருக்கும் ஞாபகம் இருக்கின்றது. வெகுதூரத்திலுள்ள பம்பாய் நகரத்தில் இன்று ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி நடக்கிறது. இப்போது நம் பாடசாலையில் பிள்ளைகளைக் கொண்டு திருநக்ஷத்திரம் கொண்டாட நாம் எல்லோரும் கூடியிருக்கிறோம்.

தலைமை ஆசிரியர் பாடசாலையின் அபிவிருத்தியைப்பற்றி ஓர் அறிக்கை சுருக்கமாகப் படித்தார். இவ்வருஷம் பிள்ளைகளின் சங்கியை அதிகமாக இருப்பதற்குக் காரணம் ஸ்ரீ அழகியசிங்கர் பெண்பிள்ளைகளை அனுமதித்ததுதான். பிறகு மாணவ மாணவிகளின் ஆடல், பாடல் வியாசம் படித்தல், சம்பாஷணை முதலியன தமிழ், ஹிந்தி, ஸம்ஸ்க்ருத பாஷைகளில் நடந்தன. இவைகளில் முதல் வகுப்பு மிகச் சிறியபிள்ளைகள் "ஸ்ரீ அழகிய சிங்கரின் சஞ்சாரம்" என்பதைப் பற்றி சம்பாஷித்தது இயற்கையிலேயே பேசுவதாக இருந்த தென்று சபையோர்களால் புகழப்பட்டது. 8-வது வகுப்பு R. ராஜகோபாலன்

"நம் அழகிய சிங்கரின் பெருமை", 7-வது வகுப்பு R- சந்தானம் "ஸ்ரீவேதாந்த தேசிகன் வேங்கடநாதனே", 6-வது வகுப்பு அம்புஜா "ஸ்ரீதேசிகன் கல்யாண குணசாலி" என்ற வியாசங்களைப் படித்தார்கள்.

பிறகு பெற்றோர்களில் உ. வே. சந்தானம் ஐயங்கார், உ. வே. சேஷாத்திரி அய்யங்கார் ஸ்வாமிகள் குழந்தைகள் நடித்த ஆடல், பாடல் முதலியன வெகு நன்றாய் இருந்தன வென்றும் இம்மாதிரியே பிரதி வருஷமும் நம் அழகிய சிங்கரின் திருநக்ஷத்திரம் நடத்துவதற்கு நாமும் உபாத்தியாயர்களும் ஒத்துழைத்து வரவேணுமெனக் கூறிமுடித்தனர். பாடசாலை மாணவ மாணவிகளுக்கு ஸஹஸ்ரநாமம், ஸ்தோத்ர ரத்னம், முகுந்தமாலை, கோபிகா கீதை முதலியன பரிசாக வழங்கப்பட்டன. கீழ்வகுப்பு பிள்ளைகளுக்கு வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டன.

பின்னர் பாடசாலையின் தலைமை ஆசிரியர் தலைவருக்கும், பெற்றோர்களுக்கும் வந்தனோபசாரம் கூறிய பிறகு சந்தனம், தாம்பூலம், சர்க்கரை முதலியன வழங்கப்பட்டு மங்களத்துடன் சபை இனிது கலைந்தது.

டி. எஸ். கோபால அய்யங்கார்,
ஹெட்மாஸ்டர், பாதூர்.

210736

ஸ்ரீரங்கம்

1956—ஹு டிஸம்பர்மீ 5உ புதன்கிழமை மாலை 4 மணிக்கு மேற்கூறிய பாடசாலையின் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்வேத மார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அவ்வமயம் ஸ்ரீ. C. V. ராஜகோபாலாசாரியர் B.A., L.T. ஸ்ரீ C. V. விஜயராகவாசாரியர் M.A., ஸ்வாமியை வரவேற்கையில் ஸ்ரீஅழகிய சிங்கரின் பரந்த நோக்கங்களையும், உலக க்ஷேமத்திற்காக இவ்வித பாடசாலைகளை ஏற்படுத்தி தர்மம், ஆசாரம் குறையாமல் படிப்பு போதிக்க ஏற்பாடு செய்து வருவதாயும், ஸம்ஸ்க்ருதம் படிப்பதுடன் ஆங்கில பரிக்ஷைகளிலும் வெற்றி அடைந்து நவீன உலகில் தர்மம், ஆசாரம் குறையாமலிருப்பதற்கு ஸ்ரீஅழகிய சிங்கரும் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீஅழகியசிங்கரின் திருத்தம்பியே எடுத்துக்காட்டாக இருப்பதாகவும் இப்பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் அவ்வித உயர்ந்த லக்ஷியத்தை அடையவேணுமென்றும், இப்பாடசாலையை ஆரம்பித்த மஹானின் திருநக்ஷத்ர நன்னாளில் ஸ்ரீஅழகிய சிங்கரின் பெருமையையும் அவர்களின் உன்னத லக்ஷியங்களையும் நன்கு எடுத்துரைக்க ஸ்ரீ. உ. வே. விஜயராகவாசாரியர் ஸ்வாமி மிகவும் ஏற்றவர் என்று கூறி அந்த ஸ்வாமியை உபந்யாஸஞ் செய்யும்படியும், குழந்தைகளை ஆசீர்வதிக்கும்படியும் பிரார்த்தித்தார். ஸ்ரீஅழகிய சிங்கருக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஒரு அபிநந்தன (அட்ரஸ்) பத்திரிகை ஸமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ ஸி. வி. விஜயராகவாசாரியர் ஸ்வாமி ஸ்ரீஸன்னதியின் பெருமையையும் இவ்வழகிய சிங்கரின் குல, குண அநுஷ்டான உயர்வுகளை குழந்தைகளுக்கு நன்கு புரியும்படி எடுத்துரைத்து, இத்தினத்தை கொண்டாடுவதின் அவச்யத்தையும் எடுத்துக்காட்டி குழந்தைகள் ஸ்ரீஅழகியசிங்கரின் அநுக்ரஹத்தால் மிக தேஜஸ்விகளாக வேண்டுமென ஸர்வேஸ்வரனைப் பிரார்த்தித்தார்.

திருமேனி அஸௌகர்யத்தையும் பொருட்படுத்தாது இதில் தானும் அந்வயிக்கவேண்டுமெனகிற அவாவினால் ஸ்ரீ விஜயராகவாசாரியர் ஸ்வாமி எழுந்தருளி நடத்திவைத்ததற்கு நன்றி கூறப்பட்டது. மற்றும் திருச்சியிலிருந்து வந்து இதில் கலந்துகொண்ட வக்கீலுக்கும், உள்ளூரிலிருந்துவந்த பொன்மலை ஸ்ரீராமஸ்வாமி அய்யங்கார் முதலானவர்கள் எல்லோருக்கும் பெற்றோர்களுக்கும் நன்றி கூறப்பட்டது.

பிறகு கோஷ்டிக்கு சந்தனம், புஷ்பம் தாம்பூலம் முதலியனவும் விநியோகமும் நடந்தது.

கே. ஸ்ரீநிவாஸச்சாரி,
ஹெட்மாஸ்டர்.

ஸ்ரீகல்யாணபிவர்த்தினீ ஸபா,
ஸ்ரீஅஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத பாடசாலை,
மதுராந்தகம்.

மேற்படி சபையின் பூர்வாங்கமாக இக்கலாசாலை அத்யக்ஷராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ

ஸ்ரீ. உப. டி. ராமஸ்வாமி அய்யங்கார் எம். ஏ. எல். டி. ஸ்வாமியின் தலைமையில் 13-9-56 அன்று மாலை 4-30 மணிக்கு கலாசாலை ப்ரார்தனை மண்டபத்தில் ஒரு கூட்டம் கூடிற்று. அப்பொழுது ஸ்ரீ உ. வே. அத்யக்ஷர் ஸ்வாமி துர்முகி வருஷத்திய ஸபாகாரியங்களை கவனிப்பதற்காக ந்யாய சிரோமணி முதல் வகுப்பிலுள்ள பி. எஸ். வரதன், வி. ஆர். ராமாநுஜன் என்னும் மாணவர்களை கார்யதர்சிகளாக தேர்ந்தெடுத்தார். பிறகு ஸபை இனிது முடிவுபெற்றது.

மேற்படி ஸபை பிறகு 5-12-56 அன்று மாலை 3-30 மணிக்குமேல் ஸ்ரீமதஹோபில மடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்வேத மார்க்கேத்யாதி ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ரமஹா தேசிகன் அவதார தின மஹோத்ஸவத்தை முன்னிட்டு மேற்படிகலாசாலையில் மீமாம்ஸாத்யாபகராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ. உ. வே. கோபாலாசார்யர் ஸ்வாமி தலைமையில் கூடிற்று. அப்பொழுது அத்யக்ஷ ஸ்வாமியும், அத்யாபகஸ்வாமிகளும் இதர பிரமுகர்களும் வித்யார்த்திகளுக்கு ஆசார்ய மஹிமையைப்பற்றி நன்கு உபந்யாஸித்தார்கள். பிறகு அத்யக்ஷஸ்வாமி 'சாத்திரஸந்தேசினீ' என்னும் பத்திரிகையை வெளியிட்டார். பிறகு கார்யதரிசியினால் தன்யவாதம் ஸமர்ப்பிக்கப்பட்டு ஸபை இனிது முடிவுபெற்றது.

பிறகு மேற்படி ஸபையானது 28-12-56 அன்று மாலை 3 மணிக்கு மேற்படி கலாசாலையில் அத்யாபகராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வி. டி. லக்ஷ்மீநரஸிம்மாசார்ய ஸ்வாமியின் தலைமையில் கூடிற்று. அப்பொழுது அத்யக்ஷ ஸ்வாமியும் அத்யாபகஸ்வாமிகளும் ஸ்ரீமதஹோபிலமடத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் குணங்களை நன்கு உபந்யாஸித்தார்கள். பிறகு காரியதரிசியினால் தன்யவாதம் ஸமர்ப்பிக்கப்பட்டு வேதகோஷத்துடன் சபையும் முடிவுபெற்றது.

பி. எஸ். வரதன்,
வி. ஆர். ராமாநுஜன்.
காரியதரிசிகள்.

பம்பாய் சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

பம்பாயிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நமது பத்திரிகைக்கு கௌரவ ஏஜண்டாக இருந்துவந்த ஸ்ரீமான் ஸ்ரீ. உப. M. V. வரதாசாரியர் ஸ்வாமி சில அசௌகர்யத்தால் விலகிக்கொண்டார். நாம் நேரில் ப்ரார்த்தித்ததின்பேரில் ஸ்ரீமான் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் P. R. ஸுந்தரராஜ ஐயங்கார் ஸ்வாமி கௌரவ ஏஜண்டாக இருக்க இசைந்துள்ளார். ஆகையால் பம்பாய் சந்தாதாரர்கள் அவரிடம் தங்கள் சந்தாபாக்கியையும் இவ்வருஷச் சந்தாவையும் செலுத்த ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

மானேஜர்
ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா

ஏஜண்டின் விலாஸம்:—

ஸ்ரீ P. R. ஸுந்தரராஜன்,
1. விச்வாஸ் புவன், 277. தேவதார் ரோடு,
மாதுங்கா, பம்பாய்-19.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[துர்முகி ஷூ உத்தராயணம் - ஹேமந்த ருது - மகர மீ 1957 ஜனவரி மீ - பிப்ரவரி மீ]

14-1-57	தைமீ 1௳	திங்கட்கிழமை	உத்தராயண புண்யகாலம்; ஸங்க்ரமண தர்ப்பணம்; மகர சுக்லத்ரயோதசி திதி, ஸங்க்ராந்தி பண்டிகை.
15-1-57	2௳	செவ்வாய்க்கிழமை	○ சதுர்தசி பூர்ணிமை திதித்வயம்; கனு.
18-1-57	5௳	வெள்ளிக்கிழமை	மகம்; திருமழிசையாழ்வார் திருநக்ஷத்ரம்.
21-1-57	8௳	திங்கட்கிழமை	ஹஸ்தம்; கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்.
22-1-57	9௳	செவ்வாய்க்கிழமை	சித்திரை; **15**-வது பட்டம் ஸ்ரீ கல்யாணவீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
26-1-57	13௳	சனிக்கிழமை	ஏகாதசி; ஸ்ரீவீரராகவன் தை ப்ரஹ்மோத்ஸவ ஆரம்பம்.
28-1-57	15௳	திங்கட்கிழமை	ஸ்ரீவீரராகவன் கருடஸேவை.
30-1-57	17௳	புதன்கிழமை	● அமாவாஸ்யை. உத்திராடம்; **42**-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
31-1-57	18௳	வியாழக்கிழமை	திருவோணம்; **3**-வது பட்டம் ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
1-2-57	19௳	வெள்ளிக்கிழமை	ஸ்ரீவீரராகவன் திருத்தேர்.
3-2-57	21௳	ஞாயிற்றுக்கிழமை	பூரட்டாதி; **6**-வது பட்டம் (ஷஷ்ட) பராங்குச யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
7-2-57	25௳	வியாழக்கிழமை	அஷ்டமி திதி; ரதஸப்தமி.
10-2-57	28௳	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி திதி.
11-2-57	29௳	திங்கட்கிழமை	ஏகாதசி வ்ரதம்; திருவாதிரை; **38**-வது பட்டம் ஸ்ரீநிவாஸசடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

[சிசிர ருது - கும்ப மீ]

12-2-57	மாசிமீ 1௳	செவ்வாய்க்கிழமை	கும்பரவி 6-46; விஷ்ணுபதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்ய திதி.
14-2-57	3௳	வியாழக்கிழமை	○ பூர்ணிமை.
15-2-57	4௳	வெள்ளிக்கிழமை	மகம்; **19**-வது பட்டம் ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
18-2-57	7௳	திங்கட்கிழமை	சதுர்த்தி - பஞ்சமி திதித்வயம்.
19-2-57	8௳	செவ்வாய்க்கிழமை	ஷஷ்டி திதி.
21-2-57	10௳	வியாழக்கிழமை	அஷ்டமி திதி, அஷ்டகை.
22-2-57	11௳	வெள்ளிக்கிழமை	அந்வஷ்டகை, நவமி திதி.
24-2-57	13௳	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி திதி.
25-2-57	14௳	திங்கட்கிழமை	ஏகாதசி வ்ரதம்; அதிதி.
26-2-57	15௳	செவ்வாய்க்கிழமை	த்வாதசி திதி.